2010

வருடாந்த அறிக்கை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

24-06-2013

மாண்புமிகு அப்துல் றிஸாத் பதியுதீன்
கைத்தொழில் வர்த்தக அமைச்சு
73/1,காலி வீதி,
கொழும்பு - 03

மாண்புமிகு ஐயா,

ஆண்டறிக்கையும் கணக்குகளின் கூற்றுக்களும் - 2010

1971 அம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இன் பிரகாரம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2010 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- **தலைவரின் அறிக்கை**
- **கணக்குகளின் கூற்று**
- **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

உண்மையுள்ள,

பந்துல எகொடகே
தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியும்
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

சிரேஷ்ட முகாமைத்துவ அலுவலர்கள் - 2010

தலைவர்	- அனில் கொஸ்வத்த (15-05--2010-வரை) -திரு ஜனக ரத்னாயக(20-05-2010 இல் இருந்து)
நிறைவேற்றுப் பணிப்பாளர்	- கலாநிதி யூசுப் கே. மரைக்கார்
பணிப்பாளர் நாயகம்	- திருமதி. டப்ளியூ. எம். டீ. எஸ். வீரகோன்
நிதிப் பிரிவு	திரு எம் கே மென்டிஸ் பணிப்பாளர் (2010 ஜூலை 30 வரை) - திருமதி பி கே சுமித்ராரச்சி பதில் பணிப்பாளர்(2010 ஆகஸ்ட் 06 இருந்து)
மனித வள அபிவிருத்திப் பிரிவு	- திரு. கே. டப்ளியூ. ஆர். பீ. விஜேரத்ன பணிப்பாளர்
சேவைகள் பிரிவு	- திரு. எம். கே. உதயபால பணிப்பாளர்
இலங்கை வர்த்தக வலைப் பிரிவு	- திருமதி. எஸ் எம் திரிமான்ன பணிப்பாளர்
ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி	- திருமதி ஜெ சிரிவர்தன பணிப்பாளர்
ஏற்றுமதி விவசாயப் பிரிவு	-திரு. எம். ஐ. சுபியான் பணிப்பாளர்
கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு	- திரு. எஸ். ஜே. சில்வா பணிப்பாளர்
சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிப் பிரிவு	- திருமதி ஆர் .எம். பி ஹேவாலியனகே பணிப்பாளர்
சட்டப் பிரிவு	- திருமதீ. டீ.டி விஜேரத்ன சட்ட உத்தியோகத்தர்
உள்ளகக் கணக்காய்வு அலகு	- திரு. எச். எஸ். பெர்னாண்டோ பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
கணக்காய்வாளர்	- கணக்காய்வாளர் நாயகம்
வங்கியாளர்	- இலங்கை வங்கி சம்பத் வங்கி தேசிய அபிவிருத்தி வங்கி

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இல. 42
நவம் மாவத்தை
கொழும்பு 2,

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
சபைப் பணிப்பாளர்கள் - 2010

1.	திரு. ஜனக ரத்னாயக	: தலைவர்
2.	கலாநிதி யூசுப் கே மரைக்கார்	: பணிப்பாளர்
3.	திரு. நவாஸ் ரஜாப்தீன்	: பணிப்பாளர்
4.	திரு. சரப் எம் சுஹைப்	: பணிப்பாளர்
5.	திரு. சுமித் விஜெசிங்க	: பணிப்பாளர்
6.	திரு. கே.பி அலாவுதீன்	: பணிப்பாளர்
7.	திரு- ரொஹாந்த என் ஏ அதுகோரல்ல	:பணிப்பாளர்
8.	திரு எ எம் ஜயவிக்ரம	மேலதிகச் செயலாளர், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு
9.	திருமதி- மெனிகே சந்திரசிரி	: மேலதிகச் செயலாளர், கைத்தொழில் மற்றும் வர்த்தக, அமைச்சு
10.	திரு. எம். எச் முயீனுதீன்	: மேலதிகச் செயலாளர், விவசாய அமைச்சு
11.	திரு. பி எல் யு திசானாயக	: மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டத்துறை அமைச்சு
12.	கலாநிதி ஏ தமிதா என் டி சொய்சா	: செயலாளர், மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சு
13.	கலாநிதி நெவில் குனவர்தன	: பணிப்பாளர் நாயகம், வியாபார தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் நீதித் திட்டமிடல் அமைச்சு
14.	திரு.பி ஜி ஆர் உயன்கொட	: மேளதிக செயலாளர், வெளிநாட்டு விவகார அமைச்சு
15 .	திரு வி சிவஞானசோதி	: செயலாளர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு

உள்ளடக்கம்

01 அறிமுகம்	63
02 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றுகை	65
03 ஐந்தொகை	90
04 வருமான மற்றும் செலவினக் கூற்றுக்கள்	92
05 காசுப்பாய்ச்சல் கூற்று	95
06 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	97

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB

2010ஆம் ஆண்டு ஜனவரி – டிசம்பர் மாதம் வரையிலான
செயலாற்றம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

1979ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்கான இலங்கையின் பிரதான அரச நிறுவனமாக விளங்குகின்றது.

தூர நோக்கு

எமது பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு சர்வதேச கொள்வனவாளர்கள் மத்தியில் பிரதான வழங்குனராக இலங்கையை மாற்றுதல்.

பணிக்கூற்று

பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு, இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் உலகளாவிய போட்டித் தன்மையினை அதிகரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கப் பெறும் அந்நியச் செலாவணி உழைப்பினை உச்சப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் தேசிய பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உச்ச அளவில் பங்களிப்புச் செய்தல் ஆகியவற்றிற்கான தேசிய பிரதான நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையை மாற்றியமைத்தல்,

எமது குறிக்கோள்

1. எதிர்காலத்திற்கான ‘‘மஹிந்த சிந்தனை – தொலை நோக்கின்’’ பிரகாரம் இலங்கையின் ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களினதும் மற்றும் சேவைகளினதும் பெறுமதியை 2015 ஆம் ஆண்டளவில் 15 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரையில் அதிகரித்தல்.
2. ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் ஸ்திரத் தன்மையினைப் பேணிவரும் அதே வேளை, ஏனைய வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஏற்றுமதிகளின் பங்கினை 2015 ஆம் ஆண்டளவில் 50 சதவீதத்தை விட கூடிய மட்டத்திற்கு உயர்த்துதல்.
3. இலங்கையின் மொத்த ஏற்றுமதியின் பெறுமதியில் ஏறத்தாழ 80 சதவீதத்திலும் அதிகமாக பங்களிப்புச் செய்யும் இனங்காணப்பட்டுள்ள பிரதான ஏழு (07) பொருட்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதோடு, அத்துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைதல்.
4. தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் ஒன்றிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் ஊடாக, இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக அதிகளவில் சாதகமானதும், சார்பானதுமான மனப்பான்மையினை சர்வதேச ரீதியில் ஏற்படுத்துதல்.

5. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் உட்பட ஏற்றுமதி வர்த்தகத்தின் நன்மைகளை, அத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் மற்றும் நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் கிடைப்பதற்கு வழியமைத்தல்.
6. ஊழியர்களின் உற்பத்தித் திறன் மற்றும் அர்ப்பணிப்பு என்பன தொடர்பாக விசேட கவனம் செலுத்தி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் அந்நிறுவனத்தின் அடிப்படை பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு சிறந்த குழுவொன்றினை கட்டியெழுப்புதல்.

இலஙுகை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
2010 ஜனவரி – டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியின் முன்னேற்றச் செயலாற்றம்

1. அறிமுகம்

இலங்கையின் ஏற்றுமதிகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு போன்றவற்றிற்கான பிரதான அரச நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை விளங்குவதோடு, 2010 ஆம் ஆண்டு ஜனவரி – டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இத்துறையின் அபிவிருத்திக்கான பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பிரதான நோக்கமாக அமைந்தது யாதெனில், ஏற்றுமதிக்குப் பொருத்தமான வர்த்தக சூழல் ஒன்றினை உருவாக்குதல், சந்தைகளை இனங்காணல், சந்தைகளுக்குப் பிரவேசித்தல், மற்றும் சந்தைகளை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கான விசேட மற்றும் உத்தியோக பூர்வ சேவைகளை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குதல், உலகளாவிய சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை அபிவிருத்தி செய்தலும் மற்றும் புழக்கத்துக்குக் கொண்டு வருதலும் மற்றும் விசேடமாக மாகாணங்களில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்றனவேயாகும். இந்நிகழ்ச்சித் திட்டங்கள், அரசாங்கத்தின் அபிவிருத்திக் குறிக்கோள்களான 80 சதவீத தொடர்ச்சியான வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் ஒன்றினை அடைதல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், வறுமை ஒழிப்பு மற்றும் பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை குறைத்தல் போன்றனவற்றில் விசேட முக்கியத்துவம் செலுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

2. 2010 ஜனவரி – டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஏற்றுமதியின் முன்னேற்றச் செயலாற்றம்

2009 ஆம் ஆண்டிலே கடும் பின்னடைவிற்கு உள்ளான இலங்கையின் ஏற்றுமதித் துறையானது, 2010 ஆம் ஆண்டிலே ஐ அ டொலர்களில் 20.98 சதவீத ஆரோக்கியமான வளர்ச்சி வீதமொன்றை பதிவு செய்ததன் மூலம் 8307 மில்லியன் ஐ அ டொலர்களுக்கு அதிகரித்திருந்தது.



மூலம்: இலங்கைச் சுங்கத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இலங்கைச் சுங்கத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2010 ஆம் ஆண்டிலே முறையே 25.31 சதவீதம் 20.1 சதவீதம் மற்றும் 12.86 சதவீதமாக வளர்ச்சியடைந்த விவசாயம், கைத்தொழில் மற்றும் கடற்றொழில் ஏற்றுமதிகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட மொத்த ஏற்றுமதிகளின் அதிகரிப்பானது 2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சாதகமான வளர்ச்சி வேகம் ஒன்றினையே காட்டியது.

தேயிலை (21.4 சதவீதம்), இயற்கை இறப்பர் (75.8 சதவீதம்), நாரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் (13.15 சதவீதம்), வாசனைத் திரவியங்கள் (66.1 சதவீதம்), பழங்கள் (31.92 சதவீதம்), வாசனை எண்ணெய் வகைகள் (208.9 சதவீதம்), வெட்டிய பூ வகைகள் மற்றும் அலங்கார மலர்ச்செடிகள் (17.84 சதவீதம்) என்பவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாகவே விவசாய உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 25.31 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.



மூலம் - இலங்கைச் சுங்கத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வைரம் (1.42 சதவீதம்), புடவைகள் மற்றும் ஆடைகள் (2.86 சதவீதம்), உணவு வகைகள் மற்றும் பானங்கள் (41.34 சதவீதம்), தோல் உற்பத்திப் பொருட்கள் (17.58 சதவீதம்), மர உற்பத்திப் பொருட்கள் (51.73 சதவீதம்), கடதாசி உற்பத்திப் பொருட்கள் (49.28 சதவீதம்), இறப்பர் உற்பத்திப் பொருட்கள் (44.88 சதவீதம்) இரசாயன மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்கள் (25.72 சதவீதம்), இலத்திரனியல், மின் மற்றும் இயந்திர உற்பத்திப் பொருட்கள் (38.13 சதவீதம்) மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (66.1 சதவீதம்), பீங்கான் பொருட்கள் (9.51 சதவீதம்), பாதணிகள் (14.58 சதவீதம்) மற்றும் பரிசுப் பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள் (18.78 சதவீதம்) என்பனற்றிலிருந்தான வருவாயானது கைத்தொழில் ரீதியான ஏற்றுமதித் துறையின் மொத்த சாதகமான செயலாற்றத்துக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செலுத்துவதன் மூலம் அதிகரித்துள்ளது.

2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய இராச்சியம் (-3.43 சதவீதம்) மற்றும் சிரியா (-5.45 சதவீதம்) தவிர்ந்த சகல பிரதான சந்தைகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் ஏற்றுமதிகளை 2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக ஏற்றுமதிகளுக்கான பிரதேச ரீதியான ஆய்வு ஒன்று காட்டுகிறது. இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் கிட்டத்தட்ட 21 சதவீதத்தினை உள்வாங்கிய ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள், 2010 ஆம் ஆண்டிலே 6.8 சதவீத ஊக்குவிக்கக் கூடிய ஒரு வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதிகளின் எதிர்மறையான வளர்ச்சி வீதங்களான முறையே 4.77 சதவீதம் மற்றும் 15.76 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க விருத்தியினைக் காட்டுகின்றது.



மூலம் - இலங்கைச் சுங்கத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அவ்வாறே மேற்படி வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்தியா (45.82%) ஜேர்மனி (14.87%) இத்தாலி (6.56%) பெல்ஜியம் (1.31%), ஐக்கிய அரேபிய நாடுகள் (37.22%) ரஷ்யா (26.47%), நெதர்லாந்து (28.06%), சிங்கப்பூர், (48.15%) மற்றும் ஜப்பான் (25.40%) ஆகிய சந்தைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றினை 2010 ஆம் ஆண்டில் காணக்கூடியதாக உள்ளது.

3. 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றச் செயலாற்றம்

3.1 சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

இலங்கைப் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை தற்போது நடைமுறையில் காணப்படும் சந்தைகள், புதிய சந்தைகளிலும் மற்றும் புதிதாகத் தோற்றம் பெற்று வரும் சந்தைகளிலும் வெற்றிகரமான முறையில் பிரவேசிப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பிரதான பிரதான பிராந்தியங்களில் பின்வரும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஐரோப்பிய பிராந்தியம் :

இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 35 சதவீதத்தினை உள்வாங்கிய ஐரோப்பிய பிரர்தியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது 54 ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் இப்பிராந்தியத்தில் எட்டு சர்வதேச வர்த்தக சந்தைகள் / கண்காட்சிகளில் இலங்கையின் பிரதிநிதித்துவத்தினை ஏற்பாடு செய்தது. 2010ஆம் ஆண்டில் ஜேர்மனியின் அம்பியன்த்தை எனும் இடத்தில் இடம் பெற்ற பரிசுப் பொருட்கள் தொடர்பான கண்காட்சி, மற்றும் கடதாசி உலகம் - ஷசந்திப்பொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டதோடு, பங்கேற்புத் தொழில்முயற்சிகளுக்கான கிட்டத்தட்ட 50 பீ2பீ கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. அவ்வாறே, இக்காலப்பகுதியில் ஜேர்மனியிலிருந்து பெல்ஜியத்துக்கு இரண்டு உள்வாரியான கொள்வனவாளர் சந்திப்பொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டன.

அவ்வாறே ஜேர்மனியின் 14 பேர் கொண்ட வர்த்தகப் அங்கத்துவ குழுவொன்றின் சந்திப்பு ஒன்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2010ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

மேலும், இக்காலப்பகுதியில் 30 பங்கேற்பாளர்களுக்கான "வினைத் திறனான வர்த்தகச் சந்தை பங்கேற்பு" எனும் நிகழ்சித் திட்டம் இலங்கையிலும், மற்றும் 06 ஏற்றுமதியாளர்களுக்கான "சீபீஜ" "ஏற்றுமதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்" நெதர்லாந்திலும் என இரண்டு இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

அமெரிக்கப் பிராந்தியம் :

இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் கிட்டத்தட்ட 23 சதவீதத்தினை இப்பிராந்தியம் உள்வாங்கியுள்ளதோடு, 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் அந்தப் பிராந்தியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளில் 7.8 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் 25 ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் கடலுணவு ஏற்றுமதியாளர்களின் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க முதல் முறையாக ஐக்கிய அமெரிக்காவில் “ சர்வதேச பொஸ்டன் கடலுணவுக் காட்சியும்”, “ சர்வதேச வீடு மற்றும் வீட்டுப் பொருட்களின் கண்காட்சியும்” 2010ஆம் ஆண்டில் சிகாகோவில் “ ஜஎப்டீ கண்காட்சியும்” ஐக்கிய அமெரிக்காவில் “ ஜேசீகே – லாஸ்வெகாஸ் கண்காட்சியும்” என நான்கு சர்வதேச வர்த்தக சந்தைகள் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டன.

அவ்வாறே, இக்காலப்பிரிவில் நியூயோக்கில் நடைபெற்ற “டப்ளியு ட்ப்ளியு டீ உலகளாவிய மூலக் கருத்தரங்கு” (“WWD Global Sourcing Forum”) மற்றும் “டப்ளியு ட்ப்ளியு டீ வியாபார பிநிஅ சம்மேளனம் (WWD Retail CEO summit”) ஆகிய இரண்டிற்கும் இலங்கையின் பங்கேற்பு ஒழுங்கு செய்யப்பட்டது. மேலும், ஐக்கிய அமெரிக்காவில் இருந்து உள்வாரியான கொள்வனவாளர்கள் சிலரை அழைத்து வந்து இலங்கை ஏற்றுமதியாளர்களுடனான சந்திப்பு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் “லத்தீன் அமெரிக்கச் சந்தை” தொடர்பான இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் 65 ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. அவ்வாறே “பாதணிகள் மற்றும் ஆடைகள்” பற்றிய கருத்தரங்கு ஒன்றும் மற்றும் இரண்டு கனேடிய ஏற்றுமதியாளர்களுடனான கலந்துரையாடலொன்றும் காலி மற்றும் கொழும்பு ஆகிய நகரங்களில் 50 ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் ஒழுங்கு செய்யப்பட்டது. அத்தோடு கொழும்பு, காலி, கண்டி, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அப்பிரதேசங்களில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கையில் உள்ள ஐக்கிய அமெரிக்க ஸ்டானிகராலயத்தின் ஒருங்கிணைப்புடன் “ வர்த்தகம் செய்தல் - Doing Business” எனும் தலைப்பின் கீழ் மற்றுமொரு கருத்தரங்கும் நடாத்தப்பட்டது.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியம் :

இலங்கை ஏற்றுமதிகளில் கிட்டத்தட்ட 20 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செலுத்தும் இப்பிராந்தியத்தின் ஏற்றுமதிகள் (சார்க், ஏனைய ஆசிய நாடுகள் மற்றும் அவுஸ்திரேலியாக் கண்டம்) 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 22.23 சதவீத குறிப்படத்தக்க வளர்ச்சியொன்றை எடுத்துக் காட்டுகின்றது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில். ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஜப்பானின் ''பூடெக்ஸ்("Foodex"), இந்தியாவின் ''ஆஹார்(''Aahar''), தென் கொரியாவின் '' சியோல் சர்வதேச கண்காட்சி'' பாகிஸ்தானின் ''மை கராச்சி'' ''எக்ஸ்போ பாகிஸ்தான்'' நேபாளத்தின் 10 ஆவது சார்க் வர்த்தகக் கண்காட்சி, 62 ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் சீனாவின் சிச்சுவான் பிரதேசத்தின் 11 ஆவது மேற்கு சீன சர்வதேச வர்த்தக கண்காட்சி ஆகிய 8 சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகள் இலங்கையின் பங்கேற்புடன் ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் 83 ஏற்றுமதிக் கம்பனிகளின் பங்கேற்புடன் சீனாவின் குங்குமீனில் நடைபெற்ற ''மூன்றாவது தென் ஆசிய நாடுகளின் வர்த்தக கண்காட்சி'' இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதன் போது சிறந்த வர்த்தக காட்சிக் கூடத்திற்கான ''தங்கப் பதக்கம்'' இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றது.

மேலும், இலங்கை வர்த்தக சபையுடன் இணைந்து 5 கம்பனிகளின் பங்கேற்புடன், வர்த்தக தொடர்புகள் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்று வங்களாதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

சீனாவின் டொமோடெக்ஸ் (Domotex) 2010 கண்காட்சிக்கு நிகராக 04 ஏற்றுமதியாளர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் மற்றும் பதனிடப்பட்ட உணவுத் தயாரிப்பில் ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 08 உற்பத்தியாளர்களுக்கு தாய்லாந்தில் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டமொன்றும் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டன. இவற்றினை விட தாய்லாந்தில் இடம்பெற்ற டூனா மாநாட்டிலும் 06 ஏற்றுமதியாளர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

''இந்திய சந்தையில் இலங்கை இறப்பர் உற்பத்திப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்புக்கள்'' தொடர்பான மாநாடு ஒன்றும் மற்றும் இந்திய இறப்பர் கைத்தொழில் சங்கத்தின் உதவியுடன் மற்றும் ''இறப்பர் எக்ஸ்போர்'' வர்த்தக கண்காட்சியை முன்னிட்டு 60 தொழில் முயற்சிகளின் உதவியுடன் விளம்பர நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது.

மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் சுயாதீன பொதுநலவாய (CIS) பிராந்தியம்

இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் சுமார் 16 சதவீதம் வீதத்திற்குப் பங்களிப்புச் செய்யும் இப்பிராந்தியத்திற்கு 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளில் சுமார் 21 சதவீதம் அதிகரித்துள்ளது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இக்காலப்பகுதியினுள் ''கைரோ சர்வதேச வர்த்தக சந்தை'' ''அகமனை மற்றும் சிற்பி (Interior & Builder - Muscat) – மஸ்காட்'', '' கல்ப் உணவு- டுபாய்'' ' தென் ஆபிரிக்காவின் சய்டெக்ஸ் - 2010'' ஆகிய நான்கு சர்வதேச வர்த்தக கண்காட்சிகளுக்கான இலங்கையின் பங்கேற்பிற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டதுடன், இந்த வர்த்தக கண்காட்சிகளில் சுமார் 35 ஏற்றுமதியாளர்கள் கலந்து கொண்டனர். தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற ''சய்டெக்ஸ் – 2010'' ஐ முன்னிட்டு விளம்பர நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ஆறு பேர் அடங்கிய பலஸ்தீன வர்த்தக பிரதிநிதிகள் குழுவின் பங்கேற்புடன், உள்வாரியான கொள்வனவாளர் சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அவ்வாறே இலங்கை – தென் ஆபிரிக்க பங்கேற்பு மாநாடு 2010ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் நாணயப் பொருளாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் தூதுவர் குழுக்களுக்காக நடாத்தப்பட்டது.

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் பணி புரியும் வர்த்தக உத்தியோகத்தர்களுடன் தொடர்பினை வலுப்படுத்திக் கொள்ளல்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் பணிக்குப் பொறுப்புடைய பல்வேறு நாணயப் பொருளாளர்கள் மூலம் ''இணைந்து செயலாற்றுதல்'' என்ற புதிய எண்ணக்கருவின் பிரகாரம், பொது நோக்கில் ஒன்றிணைந்து வர்த்தக நடவடிக்கைகளை வெற்றி கொள்வதற்காக வெளிநாட்டு தூதரக அதிகாரிகளுக்கு ஐந்து நாள் செயலமர்வொன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது. வெளிநாடுகளில் வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு தூதரகங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டுத் தொழில்நுட்பங்கள் தொடர்பான அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மூன்று தசாப்த யுத்த சூழ்நிலையின் காரணமாக கை விடப்பட்டிருந்த வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளை இலங்கையின் தலை சிறந்த துறைகளாக மாற்றியமைப்பதற்கான இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி இலக்குகளை ஊக்குவிப்பதற்கான விசேட தளத்தினை இம்மாநாடு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வெளி விவகார அமைச்சர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரினால் நாட்டிலே புதியதோர் அபிவிருத்திக் காலப்பிரிவிற்காகத் தயாரிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் சகல உலக நாடுகளிலும் உள்ள வர்த்தக உத்தியோகத்தர்களிடமிருந்து

எதிர்பார்க்கப்படும் சேவைகள் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டது. அவ்வாறே இதன் போது தூதரக அதிகாரிகளுக்கு தனியார் துறை வர்த்தகத் தலைவர்களுடன் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கும் அவர்களது எதிர்பார்ப்புக்களையும், இலக்குகளையும் தெரிந்து கொள்வதற்குமான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

ஏற்றுமதியாளர்களின் சொந்த சந்தைப்படுத்தல் திட்டத்துக்கான உதவி: வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்றுமதியாளர்களின் சொந்த ஏற்றுமதி சந்தைப்படுத்தல் முன்னெடுப்புகளுக்கான செலவினைப் பகிரும் அடிப்படையில் ஏற்றுமதியாளர்களுக்கு மீள் பெறுகை அடிப்படையில் இத்திட்டம் நிதி உதவியை வழங்குகிறது. இக்காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 10 ஏற்றுமதியாளர்களுக்கு 1.38 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை உதவியினை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

3.2 வழங்கல் சங்கிலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் எமது பிரதான ஏற்றுமதிகளான மரக்கறி வகைகள், பழ வகைகள், வெட்டிய பூ வகைகள் மற்றும் மலர்ச் செடிகள், தெங்கு சார்ந்த உற்பத்திப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், உணவு மற்றும் பானங்கள், கடற்றொழில் சார்ந்த பொருட்கள், அலங்கார மீன் வகைகள், வைரம், மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள், ஆடை வகைகள், இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்கள், தோல் உற்பத்திப் பொருட்கள், பாதணிகள், படகுகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள், ஒளியூட்டல் பொருட்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் சேவைகள் வழங்கல் போன்ற எமது உற்பத்திப் பொருட்களினதும், சேவைகளினதும் வினைத்திறனான வழங்கல் சங்கிலியை விருத்தி செய்வதற்காக ஒன்றிணைக்கப்பட்ட வழங்கல் / உற்பத்தி / வடிவமைப்பு / சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத் தொடர்கள் பல ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றம் தொடர்பான சிறு விளக்கமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

3.2.1 விவசாய ஏற்றுமதி வலயங்களை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டம் :

2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் விவசாயக் கிராமங்களை ஒன்று திரட்டி அவர்களின் பங்கேற்புடன் தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு கருத்திட்டங்கள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோள் ஏற்றுமதிக்கான விவசாய வழங்கல் அடிப்படையினை விஸ்தரிக்கும் அதே வேளை, கிராமிய சமூகத்துக்கு ஏற்றுமதியின் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவாகும். இவ்விவசாய வலயக் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்ற முன்னேற்றம் தொடர்பான விளக்கம் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **அம்பாறை மாவட்டத்தின் மஞ்சள் பயிர் செய்கை :**

இக்கருத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் கொனாகொல்ல, உஹன மற்றும் மாயாதுன்னை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 197 விவசாயிகளுக்கு

38.25 ஏக்கர் நிலப் பரப்பில் மஞ்சள் பயிர் செய்வதற்கான உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குத் தேவையான செடிகளைப் பெற்றுக் கொள்வதற்காக 15 ஏக்கர் நிலப்பரப்பில் மாதிரி நாற்று மேடை கருத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

- **கிழக்கு மாகாணத்தில் அன்னாசி பயிர்ச்செய்கைக் கருத்திட்டம் :**

இக்கருத்திட்டத்தின் கீழ் நாமல் ஓயா, வேரகெட்டன்கொட, மானிக்க மடு, பல்லன் ஓயா, கொடுவில், மத்திய முகாம் மற்றும் தீகவாபி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 200 விவசாயிகளுக்கு 1.2 மில்லியன் அன்னாசிக் கன்றுகளைப் பெற்றுக் கொடுப்பதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இது வரை 174,401 அன்னாசிக் கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, தற்போது 44 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- **கிழக்கு மாகாணத்தின் கல்முனை எனும் பிரதேசத்தில் மீன் பிடித்தலின் தரத்தினை விருத்தி செய்வதற்கான நீள் வரிசை தொழில்நுட்பத்தின் அறிமுகம் :**

ஏற்றுமதிக்காக உயர் தரமிக்க கெலவல்லா மீன் வகையினை பிடிப்பதனை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்ட இக்கருத்திட்டத்தின் கீழ் 50 பல்நாள் மீன்பிடி படகு உரிமையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவர்கள் நீள் வரிசை தொழில்நுட்பம் தொடர்பாகவும் மற்றும் மீன் பிடித்தல் பற்றிய செயல்முறை பயிற்சியொன்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

மேலும் அவர்களிடையே 200 தூண்டில்களைக் கொண்ட 50 வலைகளும் மீன் பிடிப்பதனை மேலும் முறைப்படுத்தும் நோக்கில் 35 உலகளாவிய இடப்படுத்துகை முறைமை (GPS) பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அவர்களது பயன்பாட்டிற்காக மிதக்கும் இறங்குதுறை ஒன்றும் பொருத்தப்பட்டது.

- **பொலன்னறுவை மாவட்டத்தின் ஏற்றுமதிகளுக்கான அலங்கார மீன்களின் இன விருத்தியும் மற்றும் வளர்ப்புக் கருத்திட்டமும் :**

இக்கருத்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள 100 தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு கைத்தொழிலுக்குத் தேவையான கருவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் மூன்றாம் கட்டத்தின் கீழ் உதவி வழங்குவதற்கு 125 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

- **வட மேல் மாகாணத்தின் பிங்கிரிய எனும் பிரதேசத்தில் வெட்டிய பூ மற்றும் அலங்கார மலர்ச் செடிகள் பயிர்ச்செய்கை மற்றும் பொதியிடல் கருத்திட்டம்**

இக்கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடையே 100 அன்தூரியம் வீட்டுப் பயிர்கள் மற்றும் 100 வீட்டு அலங்கார மலர்ச் செடி வகைகள் போன்றன வழங்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சகல விவசாயிகளுக்கும் தேவையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், 50 அன்தூரியம் வீட்டுப் பயிர்ச்செய்கைக்கான வசதிகள் வழங்குவதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 150 வீட்டுப் பயிர்களும் தெரிவு செய்ய்ப்பட்ட விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கருத்திட்டத்திற்கான நிலைய வசதி ஒன்றினை ஸ்தாபிப்பது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றினை விட ''மக நெகும'' கருத்திட்டத்தின் கீழ் இக்கருத்திட்டத்திற்கான வீதி ஒன்றினை நிர்மாணிப்பதற்கான பணிகளும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- **அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவிலை எனும் பிரதேசத்தில் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் மரக்கறி மற்றும் பழ வகைகளைப் பயிரிடல் :**

இக்கருத்திட்டம் திஸ்ஸமகாராம ஏற்றுமதி உற்பத்தி கிராமிய கம்பனியின் ஊடாக, 19 ஏக்கர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மா, பப்பாசி, முருங்கை, வாழை மற்றும் எல்லு என்பன இக்கருத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயிர் செய்யப்பட்டுள்ளன.

- **தென் மாகாணத்தின் கறுவா தயாரிப்பினை தரமுயர்த்தல் :**

இதன் கீழ் கறுவா கைத்தொழிலுக்கான சிறந்த தயாரிப்பு நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு 20 கறுவா தயாரிப்பு நிலையங்களை நிறுவுவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். அதன் பிரகாரம் இக்கருத்திட்டத்தின் கீழ் 15 நிலையங்களில் தயாரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 5 நிலையங்களுக்குரிய பணிகளும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக 11 சிறந்த தயாரிப்பு நடைமுறை நிலையங்களை நாடளாவிய ரீதியில் நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

3.2.2 ஏனைய வழங்கல் சங்கிலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- **தேசிய சேதன தயாரிப்பு சான்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கையில் சேதன உற்பத்தி அடிப்படையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில், சேதன உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களுக்கு சேதனச் சான்றுப்படுத்தலை இலகுபடுத்தும் நோக்குடன் ஐரோப்பா சங்கம் (ஈயூ) மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப வலயம் (ஜீ.டீ.இஸட்) ஆகியவற்றின் பங்கேற்புடன், தேசிய சேதனச் சான்றுப்படுத்தல் (உத்தரவாதக்) கம்பனி (NOGL) நிறுவப்பட்டுள்ளது. சேதன உற்பத்திப் பொருட்களுடன் தொடர்புடைய சகல விடயங்களினதும் அபிவிருத்தி மற்றும் வசதிப்படுத்தலுக்கான ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனிப்பட்ட ஒரு நிறுவனமாக "தேசிய சேதன சான்றுப்படுத்தல் அதிகார சபையினை" (NOCA) ஸ்தாபிக்கும் பணிகள் இக்கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது இக்கருத்திட்டம் தொடர்பான சகல சட்டப் பணிகளும் பூர்த்தியடைந்துள்ளதுடன், இதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, இந்நிறுவனத்தினை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.

- **ஒன்றிணைக்கப்பட்ட விவசாய மாதிரிக் கருத்திட்டம் (IAMP) :**

இக்கருத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாக அமைவது, மாகாணங்களில் உள்ள விவசாய கொத்தணிகளின் பங்கேற்புடன், தரமிக்க விவசாயப் பயிர்களினதும் / அலங்கார மீன்களினதும் வினைத் திறனான உற்பத்தியினையும், சந்தைப்படுத்தலையும் ஊக்குவிப்பதற்கும், அதனூடாக இலங்கையின் மரபுரீதியற்ற விவசாயத் துறையை விருத்தி செய்வதற்கும் விவசாயத் துறையின் பக்கம் முதலீட்டாளர்களை ஊக்குவித்தலுமேயாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டிலே 12 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 49 விவசாய கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இது வரை 30 கம்பனிகள் கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதோடு, 75.95 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி உதவி இக்கருத்திட்டங்களுக்காக பகிரப்பட்டுள்ளது.

- **தரமான முகாமைத்துவ முறைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உதவி :**

சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்குத் தேவையான ஜீஏபீ (GAP), ஜீஎம்பீ (GMP), வீஎச்ஏசீசீபீ (VHACCP), ஐஎஸ்ஓ (ISO) 22000 ஆகிய தர நியமங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உதவியினை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இக்கருத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு 23 ஏற்றுமதியாளர்கள் விண்ணப்பித்துள்ளதுடன், 08 ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அனுமதியுடன் குறித்த தரச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

- **அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி :**

ஏற்றுமதிக்காக அரிசியிலிருந்து புதிய மற்றும் இலகுவான உணவு உற்பத்திப் பொருட்களை தயாரிப்பதனை ஊக்குவிக்கும் நோக்கில் உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் கீழ் உதவி வழங்குவதற்காக 03 உணவு உற்பத்திக் கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு கம்பனிகள் ஏற்கனவே உபகரணங்களைக் கொள்வனவு செய்துள்ளன.

- **''சிலோன் கறுவா'' வர்த்தக இலச்சினையை நிலைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் :**

உலகளாவிய சந்தையில் உள்ள உற்பத்திப் பொருட்களுக்கான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு ''சிலோன் கறுவா'' என்ற வர்த்தக இலச்சினையை நிலைப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக தேசிய புலமைச் சொத்து அலுவலகத்துடன் இணைந்து தேவையான ஒழுங்கு விதிகளையும், அதே போன்று ''கறுவா இலச்சினை'' என்பவற்றினைத் தயாரித்து ஜனாதிபதி செயலகத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **பரிசுப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தல் :**

ஏற்றுமதி சந்தைக்கு உயர் தரமிக்க பரிசுப் பொருட்களை தயரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களில் ஏற்றுமதிக்கான பிரதான குழுவொன்றினை உருவாக்கும் நோக்குடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் விசேட பரிசுப் பொருட்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் இது வரையில் 60 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் அபிவிருத்திச் செய்யப்பட்டன.

இரண்டாம் கட்டத்தின் சந்தைப்படுத்தல் கட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சீனாவின் குன்மின் நகரில் நடைபெற்ற சர்வதேசப் பொருட்காட்சி ஒன்றில் பங்கேற்பதற்கான 15 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் உற்பத்தி மற்றும் வடிவமைப்பு அபிவிருத்திக் கட்டம், ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 13 வடிவமைப்பு

நிபுணத்துவர்களின் உதவியுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தைக்கு பொருத்தமான உயர் தரத்தினைக் கொண்ட பரிசுப் பொருட்களாக அபிவிருத்தி செய்வதற்கு தற்போது அந்த வெளிநாட்டு வடிவமைப்பாளர்கள் ஹப்புவித, தலகுனே, மரதமுனை, பிலிமதலாவ, கொவுல்ஆர மற்றும் மாகால்ல ஆகிய பிரதேசங்களில் கலை வடிவமைப்பாளர்களுடன் பணி புரிந்து வருகின்றனர். இந்த வடிவமைப்பாளர்களின் பரிசுப் பொருட்களின் சேகரிப்புக்கள் 2010 நவம்பர் மாதத்தில் இடம் பெற்ற ''இலங்கை வடிவமைப்பு கண்காட்சியில் மாத்திரமல்லாமல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை கண்காட்சியிலும் காட்சிப்படுத்தப்பட்டன.

இவற்றினை விட, ஏற்றுமதித் துறையை அடிப்படையாகக் கொண்ட 40 தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் ''விளையாட்டுப் பொருட்கள் துறைக்கான சான்றுப்படுத்தல் மற்றும் நியமங்கள்'' என்பன தொடர்பான செயலமர்வொன்று கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டது.

- **ஆடைகள் துறையின் மேம்பாடு :**

  இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வர்த்தக சலுகைகளின் பயன்பாட்டினை உச்சப்படுத்தும் நோக்கத்துடன், இந்தியாவில் நடைபெற்ற ''உலகளாவிய இந்தியா நெசவுக் காட்சி – 2010 "Global India Textile Show – 2010'' கண்காட்சிக்கு உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்தது. மேலும், இந்திய வலுக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையின் உத்தியோகத்தர்களது விஜயமும் ஏற்றமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டன.

  இலங்கை புடவை நிறுவனத்தினால் 2010 நவம்பர் மாதம் 15 – 20 ஆம் திகதி வரை ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கை வடிவமைப்பு வார'' நிகழ்ச்சியுடன் ஒன்றிணைந்து ''புடவைக் கைத்தொழில் மற்றும் பாதணித் துறைக்கான பெயர் மற்றும் வகைப்படுத்தல் முறைமை'' என்பன பற்றிய தொழில்நுட்ப செயலமர்வுகள் இரண்டு நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட்டன.

  இச்செயலமர்வுகளை நடாத்துவதற்காக ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் வடிவமைப்பு கல்லூரியிலிருந்து இரண்டு நிபுணர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இலங்கை வடிவமைப்பு கண்காட்சி - 2010

இலங்கை வடிவமைப்பு கண்காட்சி (SLDF)- 2010 இரண்டாவது முறையாகவும் வெற்றிகரமான முறையில் கல்கிஸ்ஸை ஹோட்டலில் நவம்பர் மாதம் 11 – 16 ஆம் திகதி வரையில் நடைபெற்றது.

இக்கண்காட்சியின் தொனிப்பொருள் ''ஆக்கத்திறன், புதிய கண்டு பிடிப்பு மற்றும் நிலையான தன்மையினை கொண்டாடுதல்'' என்பதாகும்.

இது இலங்கையின் ஆக்கத் திறன் வாய்ந்த கைத்தொழில்களையும், ஆடைத் தயாரிப்புக் கைத்தொழில்களின் ஆக்கத் திறனை உலகிற்கு எடுத்துக் காட்டும் மிகவும் இன்றியமையாத கண்காட்சியாக அமைகின்றது.

இதனை முன்னிட்டு கைப்பணிகள் கிராமம், கண்காட்சி, வடிவமைப்புக் காட்சிகள், மற்றும் சம்மேளனங்கள், செய்முறைக் கண்காட்சிகள், நடைமுறை செயலமர்வுகள் என்பன தொடர்பான 100 இற்கும் மேற்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியானது ஏனைய கைத்தொழில் நாணயப் பொருளாளர்களின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினாலும், மற்றும் வடிவமைப்புக் கல்லூரியினாலும் மற்றும் ஏற்றமதி அபிவிருத்திச் சபையினாலும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதிறந்து வைக்கப்பட்ட நவீன வடிவமைப்புக்கள், புராதன கைப்பணிகளின் சக்தி வாய்ந்த கலப்புகளும், கைப்பணியாளர்களும் கைப்பணிக் கிராமமும்'' போன்றனவே இப்பண்டிகையின் சிறப்பம்சமாகும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு வடிவமைப்பு நிபுணத்துவர்களின் தொழில்நுட்ப உதவியுடன் இந்நிகழ்வில் எமது கைப்பணியாளர்களினால் தயாரிக்கப்பட்ட '' பரிசுப் பொருட்கள், / கைப்பணிச் சேகரிப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

- **படகுக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :**

இலங்கை படகுக் கைத்தொழில் தயாரிப்புகளை கொள்வனவாளர்களுக்கு காட்சிப்படுத்தும் பொருட்டும், மேம்படுத்தும் நோக்குடனும், 2010 ஏப்ரில் மாதத்தில் படகு நிர்மாண தொழில்நுட்ப விருத்தி நிறுவனத்துடன் (BTI) இணைந்து இலங்கை படகுக் காட்சி - 2010 கண்காட்சி கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சிக்கு சுமார் 10 பிரதிநிதிகளைக் கொண்ட பாகிஸ்தான் வர்த்தகக் குழுவொன்றையும் மற்றும் மூன்று பேர் அடங்கிய இந்திய வர்த்தக பிரதிநிதி குழுவொன்றையும் பங்கேற்கச் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டன.

மேலும் 2011 ஆம் ஆண்டிலே டுபாயில் நடைபெற்ற சர்வதேச் படகுக் கண்காட்சிக்கு இலங்கையின் படகு நிர்மாணக் கைத்தொழிலுக்கான முதல் முறையாக சர்வதேச பங்கேற்பினை ஏற்பாடு செய்ததுடன் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- **பாதணிகள் மற்றும் தோல் பொருட்களின் கண்காட்சி :**

ஏற்றமதி அபிவிருத்திச் சபை கைத்தொழில்கள் மற்றும் வணிக அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நாணயப் பொருளாளர்களுடன் இணைந்து ''வாய்ப்புக்களின் உலகத்தினை நோக்கிப் பிரவேசித்தல்'' எனும் தொனிப் பொருளில் ''பாதணிகள் மற்றும் தோல் பொருட்களின் கண்காட்சி - 2010'' 2010 நவம்பர் மாதம் 5 முதல் 7 ஆம் திகதி வரையில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இது இலங்கையில் நடைபெற்ற மூன்றாவது தோல் பொருட்களின் கண்காட்சியாகக் காணப்பட்டதுடன், உள்ளுர் மற்றும் வெளிநாட்டு

கைத்தொழில்களின் அங்கீகாரத்தினை பெறுவதற்கு இலங்கையின் பாதணிகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் நன்மதிப்பை மேம்படுத்துவதே இதன் பிரதான குறிக்கோளாக அமைந்தது.

இக்கண்காட்சியில் கிட்டத்தட்ட 170 ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்பாளர்கள் தமது தயாரிப்புக்களை இங்கு காட்சிப்படுத்தினர். நந்நிகழ்ச்சியினை வெற்றிகரமாக நடாத்தப்பட்ட அதே காலப்பகுதியில் வடிவமைப்புக் காட்சி, வடிவமைப்புப் போட்டியாளர்கள், வெளிநாட்டு கொள்வனவாளர்கள் பிரதிநிதிகளின் வரவு , செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றனவும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இலங்கையின் திறன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வடிவமைப்புக் கண்காட்சி, இத்துறை சார்ந்த வடிவங்களுளையும், வடிவமைப்புப் போட்டிகளையும், தோல் பொருட்கள் மற்றும் பாதணிக் கைத்தொழிலின் இளைய மற்றும் எதிர்கால வடிவமைப்பாளர்களையும் ஊக்குவிப்பதனையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

- **மட்பாண்டப் பொருட்கள்**

மட்பாண்டப் பொருட்கள் தொடர்பான தொழில்நுட்பக் கைநூல் ஒன்று இக்காலப்பகுதியில் வெளியிடப்பட்டது.

- **வார்ப்புக் கைத்தொழில் அபிவிருத்தி**

இரும்புருக்குக் வார்ப்புக் கைத்தொழிலின் தரத்தினை உயர்த்துவதற்கான தொழில்நுட்பத்தை விருத்தி செயவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு கம்பனிகளுக்கு உதவி வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், இரும்புருக்குக் கைத்தொழிலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 06 கருத்திட்டங்களுக்கு நிதி சார் சாத்தியவள ஆய்வு மதிப்பீடு ஒன்று ஆமற்கொள்ளப்பட்டு வருகின்றது.

"Facets – 2010" (பேசெட்ஸ் – 2010) – கண்காட்சி :

2010ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற **Facets – 2010 பேசெட்ஸ் – 2010** உற்பத்தியாளர்களின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சி ஏனைய நாணயப் பொருளாளர்களுடன் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சியின் போது, 17 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விசேட வர்த்தக கண்காட்சி

ஒன்றில் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

இதன் நோக்கம் அவர்களுக்கு இதன் மூலம் சிறந்த அனுபவத்தினை வழங்குவதோடு, கொள்வனவாளர்களுடன் வர்த்தக உறவுகளை விருத்தி செய்வதும் மற்றும் உப ஒப்பந்தங்களுக்காக ஏற்றுமதியாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதுமாகும்.

- **ஏற்றுமதிச் சேவைகளின் அபிவிருத்தி**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொழில் முயற்சி செயற்பாட்டினை வெளிகொண்டுவரல் மற்றும் தொழில்சார் சேவைகள் என்பன ஏற்றுமதி அபிவிருத்தி தொழிற்பாட்டின் பிரதான துறைகளாக இனங்காணப்பட்டுள்ளதோடு, இவ்விரு துறைகளினதும் ஆற்றலை முழு உலகிற்கும் வெளிக்காட்டுவதற்காக இரண்டு இணையத் தளங்கள் வடிவமைக்கப்பட்டு மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இத்துறையினல் கிட்டத்தட்ட 90 ஏற்றுமதியாளர்கள் / ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புள்ளவர்களின் பங்கு பற்றலுடன் “ ஏற்றுமதி சேவைகள் துறைக்கான சுற்றாடல் ஒழுங்கு விதிகள்” மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையிலான தொடர்பாடல்” தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவ்வாறே 2010 ஒக்தோபர் மாதத்தில் டுபாயில் நடைபெற்ற “கிடெக்ஸ் (GITEX)– 2010” வர்த்தகக் கண்காட்சியில் 7 ஏற்றுமதிக் கம்பனிகளை பங்கேற்கச் செய்வதற்கும் ஏற்றுமதிச் சபை ஒழுங்குகளை மேற்கொண்டது.

அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் / வர்த்தக வாய்ப்புக்கள் மற்றும் உத்தியோக பூர்வ சேவைகள் துறை தொடர்பான பெறுமதி அளவை ஆய்வு ஒன்றினை நடாத்துவதற்கும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.3 பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

கிராமிய வளங்களை திரட்டும் நோக்கத்துடனும், மற்றும் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடனும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பிராந்திய வலையமைப்பின் ஊடாக பல்வேறு பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. குறித்த காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றம் தொடர்பான சிறு விளக்கமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் மாகாணம் :

- **மரக்கறி மற்றும் பழவகைகளின் பயிர்ச்செய்கை கருத்திட்டம் :**

மேலே 3.2 இல் பட்டியலிடப்பட்டுள்ள வீரவிலை விவசாய ஏற்றுமதி வலய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- **<u>திஸ்ஸமஹாராம ஏற்றுமதி உற்பத்திக் கிராமம்</u> :**

திஸ்ஸமஹாராம ஏற்றுமதி உற்பத்திக் கிராமம் : சுமார் 500 அங்கத்தவர்களை கொண்ட தேயிலையை பொதி செய்வதற்கான நாணலினால் செய்யப்பட்ட பட்டிகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள இந்த திஸ்ஸமஹாராம ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்தின் முன்னேற்றச் செயலாற்றத்தின் கண்காணிப்புப் பணிகள் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. தேயிலையை பொதிசெய்வதற்காக நாணலினால் செய்யப்பட்ட பெட்டிகளைத் தயாரிக்கும் கம்பனிகளின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தும் நோக்கத்துடன் கைத்தறிப் புடவை வகைகளைத் தயாரிக்கும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, இதற்கு அவசியமான இயந்திரங்கள் 05 இனை பொருத்துவதற்கும் மற்றும் அது தொடர்பாக பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் தேவையான உதவிகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டது.

- **<u>மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட உற்பத்தி/ வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்</u> :**

18 ஆபரண வடிவமைப்பாளர்களுக்கான இயலளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டதோடு, சீனாவின் குன்மின் நகரில் இடம் பெற்ற "குன்மின் பொருட்காட்சி" ஐக்கிய அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடைபெற்ற லாஸ் வெகாஸ் ஆபரண வர்த்தகக் கண்காட்சி மற்றும் இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற்ற "Facets – 2010" (**பேசெட்ஸ் – 2010**) கண்காட்சி என்பவற்றில் அவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை பார்வைக்கு வைப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது.

- **வடக்கு மாகாணம்**

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஒருங்கிணைப்பு அலுவலகமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளதோடு, வட மாகாண அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக மன்னார் மாவட்டத்தில் மாகாண அலுவலகம் ஒன்றினை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான பச்சை மிளகாய்களுக்கான நிரம்பல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, மன்னார் மாவட்டத்தின் பெரியமடு, புதுக்குளம் மற்றும் பலை பெரிமால்கட்டு ஆகிய கிராமங்களில் இருந்து 411 விவசாயிகள் இக்கருத்திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களுக்குத் தேவையான விதை மூலப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணம் :

வாசனைத் திரவிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :

பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக விவசாயத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் கீல்பாய்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி உதவியினை வழங்குவதற்கு இது வரையில் 125 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேலும், 100 விவசாயிகளின் பங்கேற்புடன், பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியங்கள் தொடர்பான இரண்டு அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்தளை மாவட்டத்தின் ரத்தொட்டை மற்றும் பல்லேபொல ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டன.

அலங்கார மீன்வகை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :

இக்கருத்திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பு அலகுகள் 35 நிறுவப்பட்டு தலைமை ஏற்றுமதியாளர் ஒருவருடன் இணைப்பினை ஏற்படுத்துவதே இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது. மேலும், தெரிவு செய்யப்பட்ட மீன் இனப்பெருக்கத்தினை மேற்கொள்ளும் தொழில் முயற்சியாளர்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.

வெட்டிய பூ வகை மற்றும் அலங்கார செடி வகைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :

இக்கருத்திட்டத்தின் கீழ் மாத்தளையில் 30 வெளிப்பயிர்ச்செய்கை அலகுகளும் நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களில் 20 வெளிப்பயிர்ச்செய்கை அலகுகளும் ஸ்தாபிக்கப்பட உள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து ஏற்றுமதிச் சந்தைக்கான வெட்டப்பட்ட பூ வகைகள் மற்றும் அலங்கார மலர்ச் செடி வகைகள் தொடர்பான இரண்டு கருத்தரங்குகள் அபகமுவ மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 90 விவசாயிகளின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டன.

உற்பத்தி மற்றும் வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மெனிக்கின்னை மற்றும் கலாசிறிகம ஆகிய பிரதேசங்களின் சணல் தும்பு உற்பத்தி, லேவெல்ல மற்றும் கிரிபத்கும்புர ஆகிய பிரதேசங்களில் பத்திக் உற்பத்திகள், தலகுனை பிரதேசத்தில் கைத்தறி புடவை வகை, மாத்தளை பிரதேசத்தில் மின்னியந்திரத் தறி மூலமான புடவை உற்பத்திகள் பல்லேகெலே பிரதேசத்தில் பட்டுப் புடவை உற்பத்திகள், பிலிமதலாவை பிரதேசத்தில் பித்தளை பொருட்களின் உற்பத்தி மற்றும் ஹப்புவிட பிரதேசத்தில் வார்னிஷ் உற்பத்திகள் போன்றவற்றிற்கான உற்பத்தி மற்றும் வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. வடிவமைப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் சேவை வழங்கப்பட்டதோடு, 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற இலங்கை வடிவமைப்பு கண்காட்சியின் போது அவர்களின் உறிபத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

வடமேல் மாகாணம்

மேலே 3.2 பகுதியின் கீழ் பட்டியலிடப்பட்ட விவசாய ஏற்றுமதி வலய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிங்கிரியவின் வெட்டிய பூ வகை மற்றும் அலங்கார மலர்ச் செடி வகைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பொலன்னறுவை அலங்கார மீன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு மேலதிகமாக, இக்காலப்பகுதியில் வட மேல் மாகாணத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- **குருநாகல் மாவட்டத்தின் மருந்து மூலிகை செடிகளின் பயிர்ச்செய்கையும் மற்றும் அரைத் தயாரிப்புக் கருத்திட்டமும் :**

இக்கருத்திட்டமானது வெளிவாரியாக பயிரிடுவோருக்கான முறைமையொன்றின் ஊடாக ஏற்றுமதிக்கான நியாயமான வழங்கல் அடிப்படை ஒன்றை அபிவிருத்தி செய்வதனை குறிக்கோளாகக் கொண்டுள்ளதோடு, இக்கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக மாகாண அதிகாரிகளுடன் ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :**

குறித்த காலப்பகுதியினுள் இம்மாகாணத்தில் சுமார் 200 தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் 6 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

கிழக்கு மாகாணம்

மேலே 3.2 பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்ட விவசாய வலயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் மஞ்சள் பயிர்ச் செய்கை, அம்பாறை மாவட்டத்தின் அன்னாசிப் பயிர்ச்செய்கை மற்றும் கல்முனையின் மீன்பிடிக்கான நீள் வரிசை தொழில்நுட்ப அறிமுகக் கருத்திட்டம் என்பவற்றிற்கு மேலதிகமாக பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- **வினைத் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 156 தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் 3 விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும், காளான், அன்னாசி மற்றும் மஞ்சள் பயிர்ச்செய்கை, கைத்தறி புடவை தயாரிப்பாளர்களுக்கான நவீன வடிவமைப்பு திறன்கள், நாணலினால் உற்பத்திப் பொருட்களை தயாரிப்போர் தொடர்பான 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒழுங்கு செய்யப்பட்டன.

ஊவா மாகாணம்

- **கறி மிளகாய் மற்றும் கொடித் தோடை பயிர்ச்செய்கை :**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் ஏற்றுமதிக்கான கொடித்தோடை பயிர்ச் செய்கையிலும் மற்றும் பாதுகாக்கப்பட்ட விவசாயத்தின் கீழ் கறி மிளகாய் பயிர்ச்செய்கையிலும் முதலீடுகளை மேம்படுத்துவதற்குத் தேவையான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **திறன்கள் / தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் :**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் ஏற்றுமதி செய்யக் கூடிய உற்பத்திப் பொருட்கள், அலங்கார மலர்ச் செடி வகை மற்றும் வெட்டிய பூ வகை, அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம், பொதியிடல் முறை, கறுவா தோல் அகற்றல், மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி ஆகியன தொடர்பான 05 நிகழ்ச்சித் திட்டங்கள் 185 தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் பதுளை மாவட்டத்தில் நடாத்தப்பட்டன.

3.4 ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

- **இலத்திரனியல் வர்த்தக சேவைகள் :**

ஏற்றுமதி அபிவிருத்தி சபை அதன் இலத்திரனியல் வர்த்தக நிலையமாக விளங்குகின்ற “TradenetSL” (ட்ரேட்நெட்எஸ்எல்) ஊடாக பல்வேறு இலத்திரனியல் வர்த்தக சேவைகளை வர்த்தக சமூகத்துக்கு வழங்குகின்றது. “TradenetSL” (ட்ரேட்நெட்எஸ்எல்) தென், வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் இலத்திரனியல் வர்த்தக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் தனது இலத்திரனியல் வர்த்தக நிலைய வலையமைப்பை பலப்படுத்தியுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள், “TradenetSL” (ட்ரேட்நெட்எஸ்எல்) இலத்திரனியல் வர்த்தக சேவைகளுக்கு புதிய அங்கத்தவர்கள் 35 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன், தற்போது அதன் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1652 ஆகும். இக்காலப்பகுதியினுள் நேரலை வர்த்தக புள்ளி விபரங்களுக்காக 05 புதிய சந்தாதாரர்கள் பதிவு செய்திருந்ததோடு, அவை மொத்தம் 62 சேவைகளைக் கொண்டிருந்தது. அவை நேரலை தேடல்கள் (278), இணையத்தள விளம்பரங்கள் (06), இணையத் தளங்கள் (07), இணையத்தள தொடர்புகள் (06), வணிக தலைமை பதவிகள் (118) மற்றும் மின்னஞ்சல்

சேவைகள் (83) போன்ற நேரலை சேவைகளை ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.
ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வர்த்தக உலகத்துக்கான உத்தியோக பூர்வ இணையத் தளமான www.srilankabusiness.com ஊடாக இயங்கி வருகின்ற வர்த்தக நுழைவாயிலில் (Trade Portal) தற்போது 76 ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்துள்ளதுடன், அதனூடாக 24 கொடுக்கல் வாங்கல்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அகலவத்தை, கண்டி, காலி, செவனகலை, மொனராகலை, அம்பாறை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான 09 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

வர்த்தக தகவல்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கல்

கணணிமயப்படுத்தப்பட்ட வர்த்தக தரவு வசதிகள், ஆலோசனை சேவைகள், வெளியீடுகள் மற்றும் நூலக சேவைகளுக்கான வெளியீடுகள் என்பவற்றின் ஊடாக ஏற்றுமதியாளர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கும் நோக்குடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை தனது வளங்களைப் பயன்படுத்துகின்றது. குறித்த காலத்தினுள் 35க்கும் அதிகமான நேரலை விலை தேடல்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் தொடர்பான 170 தேடல்கள் வெளிவாரியான பயன்பாட்டாளர்களாலும் மற்றும் உள்வாரியான பயன்பாட்டாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டதோடு, சுமார் 700 தொழில் முயற்சியாளர்களுக்கு நூலக வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும், ‘‘தேசத்திற்கு மகுடம்’’, ‘‘படகுக் கண்காட்சி - 2010’’, ‘‘இன்ட்ராட்’’ ‘‘FACETS’’ (பேஸெட்ஸ்) ‘‘விவசாய வர்த்தகம்’’ ‘‘தும்பதெனிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கண்காட்சி’’, ‘‘ கித்துல வருன’’ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இயந்திர தொழில் முயற்சியாளர் தினம்’’ ஆகிய கண்காட்சிகள் தகவல்களை விநியோகிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டன.

மேலும், ஏற்றமதி அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் மாகாண வலையமைப்பின் ஊடாக 2500 இற்கும் அதிகமான ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியில் நுழைவதற்கான ஆற்றலுடைய தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்றுமதியுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான சகல விதமான ஆலோசனை சேவைகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- **ஏற்றுமதியுடன் தொடர்புடைய வெளியீடுகள் :**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இக்காலப்பகுதியினுள் 24 ”Expo News” (ஏற்றுமதி தொடர்பான செய்திகள்) தொடர்பான 24 வெளியீடுகள் மற்றும் ‘‘ஏற்றுமதிச் செய்திகள்’’ ‘‘ அப்பனயன புவத்’’ 12 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு சந்தாதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மேலும், இக்காலப்பகுதியில் தகவல் பத்திரங்களும் பிரசுரிக்கப்பட்டன.

- **ஏற்றுமதி முன்னேற்றச் செயலாற்றக் குறிகாட்டிகள் 2000 – 2009**

இலங்கையின் ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய முழுமையான தரவுகளை உள்ளடக்கிய இந்த வெளியீடு அச்சு வடிவிலும், இருவட்டு வடிவிலும் வெளியிடப்பட்டன.

- **பொதியிடல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழல் முயற்சியாளர்கள் அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கான விசேடமாக உயர் தரமிக்க, நம்பிக்கையான மற்றும் கிரய வினைத்திறன் உடைய பொதியிடல் முறைகள் தொடர்பாக விழிப்பூட்டும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் அடங்கலாக நாடு பூராவும் உள்ள பல்வேறு மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பொதியிடல் நிலையத்தினால் 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. புதிய மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்திகள், கைப்பணிப் பொருட்கள், புடவை சார்ந்த உற்பத்திகள் போன்றவற்றைப் பொதியிடல், மற்றும் நவீன பொதியிடல் தொழில்நுட்பங்கள், உணவுப் பொருட்களைப் பொதியிடல், பெறுமதிச் சேர்க்கையாகவும் மற்றும் சந்தைப் படுத்தும் கருவியாகவும் பொதியிடல், பொதியிடலுக்கான பட்டியலிடல் போன்ற விடயங்கள் இந்த கருத்தரங்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

மேலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களினாலும், மற்றும் ஏற்றுமதியாளர்களினாலும் கேட்டுக் கொள்ளப்பட்ட படி நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்த சுமார் 80ஐ விட அதிகமான தனிப்பட்டவர்களுக்கும் / நிறுவனங்களுக்கும் ஏற்றுமதிக்கான பொதியிடல் தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை விநியோகித்தல், மற்றும் அறிவுரைகளை வழங்குதல் போன்ற சேவைகள் இக்காலப் பகுதியினுள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

அதேபோன்று இக்காலப் பகுதியினுள் பொதியிடல் கைத்தொழில் பற்றிய தகவல்கள் அடங்கிய கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டதுடன், அக்கைத்தொழில் பொதியிடல் தொடர்பான தகவல் பத்திரங்களும் புதுப்பிக்கப்பட்டன. தற்போது காணப்படும் ஏற்றுமதி பொதியிடல் முறைமையில் மீன்களின் அளவை அதிகரிப்பதற்கான பொதியிடல் முறைமையின் அபிவிருத்திக்கான ஆரம்ப தேவை அளவை ஒன்றும் பூர்த்தி செய்ய்ப்பட்டது.

ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது வழங்கும் விழா

2007, 2008 மற்றும் 2009 ஆகிய காலப்பகுதியினுள் ஏற்றுமதித் துறைக்கு விசேட பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்த ஏற்றுமதியாளர்களை கௌரவிக்கும் முகமாக ஜனாதிபதி விருது வழங்கும் விழாவொன்றினை அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்துவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துதலை கால தாமதப்படுத்தும் மற்றும் இடைநிறுத்தம் செய்யும் வசதித் திட்டம் (SVAT Scheme)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் ஆடைகள் தவிர்ந்த ஏனைய ஏற்றுமதித் துறைகளுக்கு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு இலங்கை அபிவிருத்தி சபையிடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான பதிவு செய்தல், கண்காணித்தல், கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாதாந்தம் அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பொறுப்புக்கள் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குப் பணிக்கப்பட்டிருந்தன. தற்போது இத்திட்டத்தின் கீழ் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்கள் 740 பேர் பதிவுசெய்து கொண்டுள்ளனர். 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் இத்திட்டத்தின் ஊடாக ஏற்றுமதியாளர்கள் சுமார் 18 பில்லியன் ரூபா தொகையினைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் தமது காசுப்பாய்ச்சல் நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்வதற்கு அது பாரிய அளவில் கைகொடுத்துள்ளது.

ஏற்றுமதியாளர்களுக்கு செஸ் வரி மீளளிக்கும் திட்டம் :

ஏற்றுமதியாளர்கள் தமது இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மீது செலுத்திய செஸ் வரியை மீளளிப்பதன் மூலம் ஏற்றுமதியாளர்களது போட்டித் தன்மையினை விருத்தி செய்வதற்கு 2009 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் ஏற்றுமதியாளர்கள் நான்கு பேர் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு அந்நியச் செலாவணிக் கணக்குகளைத் திறப்பதற்கான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டம் :

இத்திட்டம், மறைமுக ஏற்றுமதியாளர்கள், நேரடி ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் தமது நிரம்பல்களுக்கான கொடுப்பனவுகளை வெளிநாட்டு நாணயங்களில் பெற்றுக் கொள்வதற்கு வழி காட்டுகின்றது. இவ்வாறு கிடைக்கும் கொடுப்பனவுகளை மறைமுக ஏற்றுமதியாளர் அந்நியச் செலாவணிக் கணக்கு ஒன்றில் (IEFCA) வைப்புச் செய்ய முடிவதோடு, தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இதன் கீழ் இந்த ஆண்டினுள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 3 மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு அவர்கள் சார்பாக அந்நியச் செலாவணிக் கணக்குகளைத் திறப்பதற்கு வங்கிகளுக்கு சிபாரிசுகளை வழங்கியது.

“தஹஸ் திரிய” முதலீட்டு ஆதரவு நிகழ்ச்சித் திட்டம்

பெறுமதி சேர்க்கப்பட்ட மரபு ரீதியற்ற உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் தொழில் முயற்சியாளர்களின் ஏற்றுமதிச் செயலாற்றம் தொடர்பாக வெகுமதிகளை வழங்குதல் மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் முதலீடு செய்வதற்கு அவர்களை ஊக்குவித்தல் போன்ற குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதியினுள், “தஹஸ் திரிய” கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட முதலீடுகளுக்கு 23.50

மில்லியன் ரூபா தொகை ஏற்றுமதியாளர்களுக்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மீளளிப்புச் செய்யப்பட்டது.

உற்பத்தித் துறை ஆலோசனை சபைக் குழுக்களை ஸ்தாபித்தல் :

ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் பிரதான உற்பத்தித் துறைகள் மற்றும் ஏனைய ஏற்றுமதியுடன் தொடர்புடைய துறைகள் உள்ளடங்கலாக 20 ஆலோசனைக் குழுக்கள் ஆலோசனை சபைகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஸ்தாபிக்கப்பட்டன. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டதுடன், 2011 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஆலோசனைக் குழுக்களின் கூட்டங்களை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உபாயத் திட்டங்களைத் தயாரித்தல் - 2011 - 2015 :

ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது 2011 – 2015ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான உபாயத் திட்டத்தினை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணியாளர்களினதும் மற்றும் ஆலோசனைக் குழு அங்கத்தவர்களின் ஆலோசனையுடன் தயாரித்ததோடு, அவ்வுபாயத் திட்டங்களை 2010ஆம் அண்டு திசெம்பர் மாதம் 06 ஆம் திகதி நடைபெற்ற விழாவின் போது கௌரவ கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டிலே எமது வருடாந்த ஏற்றுமதி வருமானத்தை 15 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும் குறிக்கோளுடன் தயாரிக்கப்பட்ட உபாயத் திட்டத்தின் நோக்கம் யாதெனில், பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாடு தொடர்பான தேசத்தின் முன்னணி நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினை மாற்றியமைத்தல், இலங்கையின் ஏற்றுமதித் துறையின் சர்வதேசப் போட்டித் தன்மையினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் மூலம் உச்ச அந்நியச் செலாவணியை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உச்ச பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவாகும்.

திறன் அபிவிருத்தி, விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் :

இக்காலப்பகுதியினுள் ஹொரனை, திருகோணமலை, பண்டாரவளை, பதுளை, அகலவத்தை, குருநாகல், நுவரெலியா, காலி, நல்லூர், கண்டி, களுத்துறை, அம்பகமுவ, கேகாலை மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களில் 85 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடும் சுமார் 3845 தொழில் முயற்சியாளர்களின்

பங்கேற்புடன் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சந்தைகள், ஏற்றுமதி செய்யக் கூடிய உற்பத்திப் பொருட்கள், பிரதான சந்தைகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் செயன்முறைகள், இறக்குமதி / ஏற்றுமதி செயன்முறைகள், பொதியிடல், மற்றும் உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்தல் தொடர்பான விழிப்பூட்டலை ஏற்படுத்துவதையே குறிக்கொளாகக் கொண்டிருந்தது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயன்முறைகள் பற்றிய இரண்டு விசேட பயிற்சி நெறிகளை நடாத்தியது. இக்காலப்பகுதியில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயன்முறைகள் தொடர்பான 04 சான்றிதழ் பாடநெறிகளையும் மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் செயற்பாட்டு ரீதியான நோக்குகள் பற்றிய 3 பாடநெறிகளையும் நடாத்தியது. இதனூடாக ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 287 தொழில் முயற்சியாளர்களுக்கு குறித்த துறைகளில் பயிற்சியினைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

2010திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

	நடப்பாண்டு 2010 ரூபா சதம்	கடந்த ஆண்டு 2009 ரூபா சதம்
சொத்துக்கள்		
நடைமுறையல்லாச் சொத்துக்கள்		
ஆதன, இயந்திர உபகரணங்கள்	53,685,815.14	59,550,760.38
முதலீடுகள்	324,562,361.00	287,881,201.00
நடைமுறைச் சொத்துக்கள்		
இருப்புகள்	1,824,633.91	2,265,189.94
கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டியவைகள்	142,616,039.28	158,881,814.08
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	73,776,084.89	4,551,616.91
சுங்கத்தின் மூல சேகரிப்பாளர்	468,742,448.83	468,742,448.83
	1,065,207,383.05	**981,873,031.14**
மூலதனம்		
அரசாங்கப் பங்களிப்பு	7,904,002.00	7,904,002.00
யூஎன்டீபீ பங்களிப்பு	2,110,282.00	2,110,282.00
ஐரீசீ பங்களிப்பு	12,716.35	12,716.35
ஏற்றுமதி ஊக்குவிப்புச் செயலகம்	202,677.32	202,677.32
	10,229,677.67	**10,229,677.67**

பகிரப்படாத உழைப்பு

செலவினத்திற்கு மேலான வருமான மிகை	922,253,187.13	760,419,525.67
நடைமுறையல்லாப் பொறுப்புகள்		
குத்தகைக் கடன்கொடுத்தோர்		-
நடைமுறைப் பொறுப்புகள்		
கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுக் கட்டணங்கள்	55,991,525.31	136,242,589.30
பணிக்கொடைக்கான ஏற்பாடு	72,344,753.48	70,588,128.50
	128,336,278.79	**206,830,717.80**
தேறிய சொத்துக்கள் - எக்ஸ்போ பிரிவு	4,388,239.46	4,393,110.00
	1,065,207,383.05	**981,873,031.14**

அனில் கொஸ்வத்தை
தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றுனர்

எம் கே ஜீ மெண்டிஸ்
நிதிப் பணிப்பாளர்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான
வருமானச் செலவினக் கூற்று

	நடப்பாண்டு 2010 ரூபா சதம்	கடந்த ஆண்டு 2009 ரூபா சதம்
செஸ் வருமானம்	493,750,000.00	414,350,000.00
செஸ் மீளளிப்புகள	55,400,000.00	-
வட்டி	2,535,733.94	
சில்லறை வருமானம்	25,370,105.01	17,677,471.52
புங்கிலாப வருமானம் & இலாபப் பகிர்வு	15,571,625.75	46,416,186.23
இணைக் கம்பனி வருமானம்	39,681,160.00	
கருத்தரங்குகளும் பாடநெறிக் கட்டணங்களும்	10,809,545.49	12,459,511.89
தேசிய சேவை கிராம எழுச்சி	-	889,730.00
கடன் வட்டி	2,404,486.37	2,607,207.34
புத்தக விற்பனை	316,621.00	468,541.00
நிலையான சொத்து விற்பனையிலிருந்தான இலாபம்	-	-
சென்னை வாடகை மற்றும் மின்சார சேதன உற்பத்தி அபிவிருத்தி	50,002,.24	20,305,453.00
	645,889,279.80	**515,174,100.98**
<u>நிர்வாகச் செலவினங்கள்</u>		
தனியாள் ஊதியம்	139,861,764,.17	143,144,337.63
ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஒய்வூதியம்	20,729,866.63	28,065,926.72
உள்ளூர் போக்குவரத்து	1,030,641.40	1,679,752.12

வழங்கல் தேவைப்பாடுகள்	3,494,581.33	6,239,459.48
ஏனைய சேவைகள்	20,755,771.92	24,868,879.37
புலமைப்பரிசில் பயிற்சி மற்றும் ஏனையவை	1,409,647.54	1,804,037.73
அலுவலக உபகரண பராமரிப்பு	1,593,673.65	1,273,029.88
வாடகை	47,539,332.23	47,292,330.90
எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள்	6,24,963.66	9,196,519.94
மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல மற்றும் பராமரிப்பு	5,975,377.29	7,006,769.26
தனியார் வாடகைக் கட்டணங்கள்	4,370,051.26	2,491,479.85
தொடர்பாடல் மற்றும் சந்தாப்பணம்	6,930,480.80	7,381,577.68
பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு	8,809,011.64	9,388,497.00
	269,125,163.52	**289,832,597.56**

ஏற்றுமதி அபிவிருத்திச் செலவினங்கள்

ஏற்றுமதி விவசாயப் பிரிவு	105,726,182.74	58,706,277.67
ஈயூ நிதியீட்டுச் செயற்திட்டம்	5,694,429.69	7,211,887.22
சந்தைப்படுத்தல் பிரிவு	44,605,469.36	29,594,988.91
இலங்கை வர்த்தக மையம் - சென்னை		44,270,923.92
கொள்கைத் திட்டமிடல் பிரிவு	3,023,482.90	139,954.07
உற்பத்தி முகாமைத்துவப் பிரிவு	18,464,752.94	34,915,450.32
சேவைப் பிரிவு	2,245,110.01	2,480,757.37
சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு	8,474,023.05	11,280,373.75
வியாபார தகவல் சேவைகள் பிரிவு	4,744,062.28	8,464,030.29
வியாபார வலைப் பிரிவு	6,890,543.54	2,275,793.82
ஏற்றுமதி ஊக்குவிப்பு – தகஸ் திரிய	6,288,494.10	4,594,862.06
ஸ்டிமியுலஸ் தொகுதி	-	4,742,907.00
ஒருங்கிணைந்த விவசாய மாதிரி பண்ணைச் செயற்திட்டம்	12,394,662.70	9,066,151.40
எச்ஏசீசீபீ நிகழ்ச்சித்திட்டம்	-	452,966.00

அரிசி சார் பொருட்கள்	900,000.00	478,631.87
சர்வதேச தரச் சான்றுறுதி	546,128.00	1,192,320.00
செஸ் மீளளிப்பு	1,494,950.03	-
	221,492,291.34	**219,868,275.67**
மொத்தச் செலவினம்	**490,617,454.86**	**509,700,873.23**
செலவினத்திற்கு மேலான வருமான மிகை	**155,271,824.94**	**5,473,227.75**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

			ரூபா மில்லியன்
<u>2009</u>	<u>செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்</u>		<u>2010</u>
			155,272
5,473	**செலவினங்களுக்கு மேலானவருமானம்**		
	அவற்றிற்கான சீராக்கம்		
9,389	பெறுமானத்தேய்வு	7,951	
12,609	பணிக்கொடைக்கான ஏற்பாடு	6,015	
-	நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பு மீதான (இலாபம்)/ நட்டம்	-	
(9,414)	கடந்த ஆண்டுச் சீராக்கங்கள்	(6,562)	
(46,416)	பங்கிலாப வருமானம்	(55,253)	
(2,607)	வட்டி வருமானம்	(2,404)	
	காசாக மாற்றப்படாத பண்டங்கள்		
	குத்தகை வட்டி	-	
(36,439)			(50,253)
(30,966)	**தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களின் முன்னரான செயற்பாட்டு இலாபம்**		**105,019**
555	பொருட் பதிவுப் பொருட்களிலான (அதிகரிப்பு)/ குறைவு		441
857	கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டியவைகளிலான (அதிகரிப்பு)/ குறைவு		16,266
-	கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டியவைகளிலான (பிரதான சேகரிப்பாளர்) (அதிகரிப்பு)/ குறைவு		-
36,278	கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினங்களிலான (அதிகரிப்பு)/ குறைவு		(59,374)
37,690			(42,667)
6,724	**செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல்**		**62,352**

(7,606)	செலுத்தப்பட்ட பணிக்கொடை	(4,259)
-	செலுத்தப்பட்ட வரிகள்	-
(7,606)		(4,259)
(882)	**செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/ (வெளிப்பாய்ச்சல்)**	58,093
	முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்	
(3,159)	நிலையான சொத்து கொள்வனவு	(2,087)
-	நிலையான சொத்து விற்பனையிலிருந்தான நலன்கள்	-
11,773	பங்கிலாப வருமானம்	15,572
(10,553)	செலுத்தப்பட்ட குத்தகை வருமானம்	(1,758)
2,607	பெறப்பட்ட வட்டி	2,404
668		14,131
(214)	**முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/ (வெளிப்பாய்ச்சல்)**	72,224
	நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்	
	பங்குகளிலான முதலீடுகள்	-
(8,279)	முதலீடுகளின் மீட்பு	(3,000)
(8,279)		(3,000)
(8,493)	**ஆண்டின் போதான காசும் காசுக்குச் சமமானவைகளிலான தேறிய (அதிகரிப்பு)/ குறைவு**	69,224
13,045	ஆண்டின் ஆரம்பித்திலான காசும் காசுக்குச் சமமானவைகளும்	4,552
4,552	ஆண்டின் இறுதியிலான காசும் காசுக்குச் சமமானவைகளும	**73,776**

தலைவர்,
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை 2011 திசெம்பர் 23 ஆம் திகதி தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளையும், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்காக போதியளவு அடிப்படையொன்று எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிதி நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான

அதன் செயற்பாட்டு நிதிசார் விளைவுகள், காசுப் பாய்ச்சல் என்பவற்றினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமம்

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

இலங்கை கணக்கீட்டுக் நியமத்துடனான தொடர்பு		இணங்காமை
(அ) நியம இலக்கம் 18	(i)	05 ஆண்டுகளுக்கு முன்னர் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த கணனிகள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் தொலைக்காட்சி உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(ii)	பெறுமதி முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.
	(iii)	சொத்தின் பயன்படு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் என்பவற்றிற்கு பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்க வில்லை.
	(iv)	ரூபா 11,494,648 தொகையான ஆதனங்களை மேம்படுத்துவதற்காக

செய்யப்பட்ட மூலதனச் செலவினத்தை, குத்தகை உடன்படிக்கை காலத்தினுள் பதிவழிப்பதற்காக ஆதனப் பெறுமானத் தேய்வு கொள்கை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணனி மென்பொருட்கள், தொலைக்காட்சி உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு முறையே ரூபா 41,634 தொகை குறைவாகவும் ரூபா 17,008 தொகை கூடுதலாகவும், ரூபா 276,160 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் போது குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32,750,000 கூட்டுத்தொகையான 10 வாகனங்கள் 2006 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்படாமையால் மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு ரூபா 3,353,600 ஆல் குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் இணைந்த கம்பனியான ''டிவொலப்மென்ட் ஹோல்டிங்'' கம்பனியின் பங்குகளில் செய்யப்பட்ட முதலீட்டினை கணக்கீடு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இணைந்த கம்பனியின் பகிர்ந்தளிக்கப்படாத திரட்டிய இலாபம் இருக்கையில் 2000 முதல் 2005 வரையிலும் மற்றும் 2007 ஆகிய 07 ஆண்டுகளின் போது முதலீட்டின் தற்போதைய பெறுமதி அதிகரித்திருந்தமை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கம்பனியின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,004,166,781 தொகையான நிறுத்தி வைத்த இலாபத்தின் அடிப்படையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 27 இன் பிரகாரம் முதலீட்டின் முகப்புப் பெறுமதி அதிகரிப்பு ரூபா 411,708,380 தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 232,277,411 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) இதன் பிரகாரம் முதலீட்டின் தற்போதைய பெறுமதி அதிகரிப்பினை கணக்கீடு செய்தல் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கை ஒத்த வகையிலும் தொடர்ச்சியாகவும் சரியாகவும் பின்பற்றப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iv) சபை வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தமையால் கம்பனியிலிருந்து 2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் சபைக்கு கிடைத்த ரூபா 36,244,971 தொகையான பங்கிலாபத்திலிருந்து நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட முடியாத போதிலும், கம்பனி ரூபா 3,624,498 தொகை நிறுத்தி வைத்தல் வரியை அறவீடு செய்தமையால் பங்கு இலாப வருமானம் குறைவாக கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அவ்வாறு கிடைக்க வேண்டிய ரூபா 3,624,498 தொகையான பங்கிலாப வருமானத்தை அறவிடுவதற்கும் கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1998 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு வரையிலும் கணக்கீடு செய்யப்படாதிருந்த ரூபா 1,154,000 தொகையான நிலையான வைப்பொன்றுக்காக மீளாய்வாண்டின் போது பணத்தைப் பெற்று ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெவ்வேறு சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,842,403 தொகையான 15 முற்பணங்களுக்குரிய சேவைகள் கிடைக்கப் பெறாதிருந்தமையால் அம்முற்பணம் தீர்க்கப்பட்டு உரிய செலவினத்தை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது

(ஊ) வெவ்வேறு ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கின் கீழ் தனியார் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு ரூபா 156,848,566 தொகையாக இருந்ததுடன், அதன் பெறுமதி வீழ்ச்சியடையும் இடருக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 159,838,617 தொகையாக இருந்தது. இதன் பிரகாரம் முதலீட்டின் பெறுமதியை மிகைத்து, பெறுமதி குறையும் இடருக்காக ரூபா 2,990,551 தொகை நிதிஏற்பாடு கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஏற்றுமதியாளர்களுக்காக செயற்படுத்தப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட கடன்களில் 2010 திசெம்பர் 31 நிலுவையாக இருந்த மீதி கணக்கின்

பிரகாரம் ரூபா 46,655,856 ஆன போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன் பட்டோலையின் பிரகாரம் ரூபா 45,587,690 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,068,166 தொகையான மீதிகளின் வேறுபாட்டு இணக்கம் செய்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெறவேண்டிய கடன்கள்

(i) ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட கடன்களில் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 46,737,356 தொகையான கடன் மீதிகளுக்காக ரூபா 57,159,274 தொகை அதாவது ரூபா 10,421,917 தொகை கூடுதலாக அறவிடமுடியாக் கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் 07 ஏற்றுமதியாளர்களினால் நிலுவையான கடன்கள் செலுத்தப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறு கணக்குகளில் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,421,918 தொகையான அறவிட முடியாக்கடனுக்கான ஏற்பாடு மீளாய்வாண்டின் போது கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் சேர்ந்திருந்த ரூபா 65,287,697 தொகையான கிடைக்க வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையிலான வரி (VAT) மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், அக்கணக்கு மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இணக்கம் செய்யப்படாமல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iii) இந்தியாவின் சென்னையிலுள்ள இலங்கை வர்த்தக நிலையத்தில் 07 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 9,510,139 மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 2,637,383 தொகையுமாக ரூபா 12,147,522 கூட்டுத்தொகை நிலுவையாக இருந்து 2 முதல் 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) ஏற்றுமதி விவசாய வலய நிகழ்ச்சித்திட்டத்தின் அம்பாறை மாவட்டத்தின் அன்னாசி பயரிச்செய்கை செயற்திட்டத்தின் 1,200,000 முரசி அன்னாசி மொரெயியன் விதைகளை கொள்வனவு ஒப்பந்தத்திற்காக ரூபா 4,500,000 முற்பணம் 2009 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதும் அதில் 174,401 அன்னாசி மொரெயியன் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம்

உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல் மற்றும் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உடன்படிக்கை காலம் முடிவடைந்தமை போன்ற காரணங்களினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,191,993 தொகையான எஞ்சிய முற்பணத் தொகை 2011 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படாமல் முற்பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) ஏற்றுமதி விவசாய வலய நிகழ்ச்சித்திட்டத்தின் அம்பாந்தோட்டை வீரவெல மரக்கறி மற்றும் பழவகை நடுகைச் செயற்திட்டத்தின் 04 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,857,360 தொகையான முற்பணத்தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், முற்பணம் தீர்க்கப்பட்டு செலவினத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) ஏற்றுமதி விவசாய வலய நிகழ்ச்சித்திட்டத்தின் மன்னார் மிளகாய் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக தலைமைச் செயலாளருக்கும் விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் தீர்க்கப்படாத முற்பண மீதிகள் முறையே ரூபா 1,535,572 தொகையும் ரூபா 250,000 தொகையுமாக இருந்தன.

(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

04 கணக்குகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் சேர்ந்திருந்த ரூபா 5,359,837 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை செலுத்தி விடுபடுவதற்கு அல்லது இணக்கம் செய்யப்பட்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 481,400,978 கூட்டுத்தொகையான தனியார் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு, ரூபா 46,655,856 கூட்டுத்தொகையான ஏற்றுமதியாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன், ரூபா 83,113,243 கூட்டுத்தொகையான நானாவித கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டிய தொகை, ரூபா 52,972,310 கூட்டுத்தொகையான நானாவித கடன்கொடுத்தோர், ரூபா 2,035,247 கூட்டுத் தொகையான தூதுவர் அலுவலகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி

சேர்க்கப்பட்ட வரி மற்றும் அவ்வரிக் கணக்குகளிலிருந்து செய்யப்பட்ட ரூபா 3,476,280 தொகையான செலவினம் போன்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளுக்கு ஒத்த முதலீட்டு ஆவணங்கள், கடன் ஆவணங்கள், கடன்பேரேடுகள், கடன்பட்டோர் பதிவேடுகள், கடன்பட்டோர் பேரேடுகள், கடன்கொடுத்தோர் பதிவேடுகள், கடன்கொடுத்தோர் பேரேடுகள், விரிவான பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல்கள், வங்கி கணக்கு கூற்றுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பட்டியல்கள், செலவின அறிக்கைகள் மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவ்விடயங்களைத் திருப்திகரமாகச் மெய்மையாய்வு செய்ய அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தன.

(ஆ) சபையின் இணைந்த கம்பனியொன்றான ‘‘டிவொலப்மென்ட் ஹோல்டிங்ஸ்’’ கம்பனியினால் சபையின் பாவனைக்காக வழங்கப்பட்ட ரூபா 8,356,005 தொகையான 1656 தளபாட அலகுகள் நிலையான சொத்துக்களின் கீழ் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அந்நிலையான சொத்துக்களின் உரித்து சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் ரூபா 2,624,250 கூட்டுத்தொகையான 2 சொத்துக் கணக்குகள் மற்றும் ரூபா 16,772,881 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் 04 கணக்கு மீதியாக இருந்ததுடன், அப்பழைய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கணக்கு மீதி தொடர்பாக தெளிவுபடுத்தல்கள் மற்றும் அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அக்கணக்கு மீதிகள் சரியானது என உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஈ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள், ஏற்றுமதியாளர்களின் பங்களிப்புக்கள் மற்றும் EU-EPV Sales Control போன்ற பொறுப்புக் கணக்கு மீதிகளில் முறையே ரூபா 680,565 தொகை, ரூபா 1,833,757 தொகை மற்றும் ரூபா 10,403,689 தொகையுமாக ரூபா 12,918,011 கூட்டுத்தொகையான அசாதாரணமான வரவு மீதிகளும் வெளிநாட்டு பிரயாண கடன்பட்டோர் சொத்துக் கணக்கின் மீதியில் ரூபா 458,757 தொகையான அசாதாரண செலவு மீதி காண்பிக்கப்பட்டதுடன், அது தொடர்பான தெளிவுபடுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. கொடுக்கல் வாங்கல்கள் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) கணக்கு செம்மையாக்கல்கள் மற்றும் முற்பணங்களை தீர்வு செய்வதற்காக 720 நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் செலவினம், வருமானம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் திரண்ட மிகை போன்ற கணக்கு மீதிகளுக்கு முறையே செய்யப்பட்ட ரூபா 59,380,031, ரூபா 519,400,884, ரூபா 2,688,387, ரூபா 11,643,121 மற்றும் ரூபா 5,992,846 ஆகிய தொகைகளை கணக்கீடு செய்வதற்காக அதற்குரிய நாட்குறிப்பு பதிவேடுகள் சான்றுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்கீடு செய்வது தொடர்பாக போதியளவிலான தகவல்கள் மற்றும் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் நாட்குறிப்பு பதிவின் மூலம் அநேகமான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன், அது தொடர்பாக விளக்கங்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய வழங்கப்பட்ட ரூபா 903,243,571 கூட்டுத்தொகையான 16 கணக்காய்வு ஐயவினாக்கள் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு 2011 ஒக்தோபர் 14 ஆம் திகதி வரையிலும் 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

--

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு	ஏற்றுமதி அபிவிருத்தி வேலைத் திட்டம் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்து வதற்குப் பொறுப்பாக இருக்கும் சனாதிபதி மற்றும் அமைச்சர்களுடன் கூடிய தேசிய அபிவிருத்திச் சபை 1992 ஆம் ஆண்டு முதல் 2010 வரையில் 19 ஆண்டுகளில் கூட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	2006 நவம்பர் 30 ஆந் திகதிய டிஎம்எஸ்/ஏ2/ஈடிபி ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தின் சுற்றுநிருபத்தின் vi ஆம் பந்தி	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு நடைமுறை திருத்தம் செய்யப்பட்டு, திருத்தப்பட்ட நடைமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.
(இ)	2002 நவம்பா் 02 ஆந் திகதிய ஐஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்று நிருபம் மற்றும் நி.பி 350 மற்றும் 357	ரூபா 140,186,137 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது மெய்மையாய்வு செய்யப்படாமல் இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டின் சொத்து மெய்மையாய்வு சபை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.7 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அலுவலகக் கடமைக்காக ஒவ்வொரு பிரிவிற்கும் இணைக்கப்பட்டிருந்த 09 வாகனங்கள் அலுவலக கடமைகளுக்குப் புறம்பாக வீட்டுக்குச் செல்லவும் வரவும் தனிப்பட்ட பயணங்களுக்கும் ஈடுபடுத்தியும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் 1999 ஒக்தோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களாக சபையின் பணிப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2009 யூலை முதல் 2010 யூன் வரையான ஆண்டினுள் அந்த 07 வாகனங்களின் ஓட்டம் மற்றும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் செலவினம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அலுவலக நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் தனிப்பட்ட பிரயாணத்திற்காக 86,878 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தி, அதற்காக ரூபா 1,155,396 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்தது. அது மொத்த எரிபொருள் கிரயத்தில் 63% ஆக இருந்தது.

(ii) அதற்கு மேலாக வீட்டிலிருந்து அலுவலகத்திற்கும் செல்வதற்கும் வரவும் வாடகை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன்,

மீளாய்வாண்டில் மட்டும் வாடகை வாகனங்களுக்காக ரூபா 46,065 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) தனிப்பட்ட பிரயாணத்திற்காக வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்திய சாரதிகளுக்கு மேலதிக நேர வேலையும் இணைந்த படியும் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது ரூபா 6,385,605 செலவு செய்யப்பட்டு வீட்டிற்கும் அலுவலகத்திற்குமிடையில் செல்வதற்கும் வருவதற்கும் சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த பொது போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தாமல் வீட்டிற்கு செல்வதற்கும் வருவதற்குமாக பணிப்பாளர்கள் வெவ்வேறாக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) செயற்திட்டத்தை செயற்படுத்தும் முயற்சியாளர் கம்பனியினால் உற்பத்தி துறையின் முதலீட்டிற்காக செலவிடப்பட்டு, செலவின அறிக்கை மற்றும் எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதில் 50% ஆன ஒரு பகுதி மீளளிப்பாக, சபையின் நிதி மானியங்கள் வழங்கல் ஒருங்கிணைந்த விவசாய மாதிரி நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி உதவிக் கொடுப்பனவு முறையாக இருந்த போதும் அதற்கு முரணாக செலவினங்களை மேற்கொள்வதற்கு முன்னர் செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனிக்கு ரூபா 2,000,000 தொகையான முற்பணமொன்று 2007 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அம்முற்பணம் உற்பத்தி துறையில் முதலீடு செய்யப்பட்டதாக, செலவின அறிக்கையும் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது செலுத்திய முற்பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதி மீளாய்வு

3.1.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் மொத்த வருமானமும் மொத்தச் செலவும் முறையே ரூபா 645,889,280 மற்றும் ரூபா 490,617,455 ஆக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மொத்த வருமானமும் செலவுகளும் முறையே ரூபா 515,174,101 மற்றும் ரூபா 509,700,873 ஆக இருந்தன. அதன் பிரகாரம் சபையின் செயற்பாடுகளின் விளைவுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 155,271,825

மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 5,473,228 மிகையாக இருந்தமையால் நிதி விளைவுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 149,798,597 மிகையில் அதிகரிப்பொன்றினைக் காட்டியது. 2010 ஆம் ஆண்டின் போது அபிவிருத்திச் செலவினம் ரூபா 1,624,015 ஆல் அதிகரித்திருந்த போதிலும், பெறுவனவுகள் ரூபா 130,715,179 ஆல் அதிகரித்திருந்தமையும் நிர்வாகச் செலவினம் ரூபா 20,707,433 ஆல் குறைவடைந்திருந்தமையும் இதற்குத் தாக்கமளித்திருந்தது.

3.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆண்டிற்குரிய செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்படாமல், அவற்றை கணக்கு வைத்தல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் ஏற்பாடுகளிலிருந்து விலகி பின்னைய ஆண்டுகளின் போது திரண்ட மிகைக்கு / பற்றாக்குறைக்கு முன்னைய ஆண்டின் சீராக்கமாக கணக்கீடு செய்தல் நடைமுறையாகக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இதனால் அவ்வாண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட நிதி விளைவுகள் அசாதரணமான மற்றும் எதிர்மாறான வேறுபாடாக நிதி விளைவுகளில் பாதகமாக தாக்கமளித்திருந்தன.

(இ) முன்னைய 03 ஆண்டுகள் தொடர்பில் பாதகமான தாக்கம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 5,473,227 மிகை, மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 6,561,836 தொகையான சீராக்கங்களின் பின்னர் அதற்கு எதிர்மாறாக ரூபா 1,088,609 ஆன பற்றாக்குறையாக மாறயிருந்தது.

(ii) 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 17,318,705 மிகை, 2009 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட ரூபா 9,414,273 தொகையான சீராக்கங்களின் பின்னர் ரூபா 7,904,432 வரை குறைவடைந்திருந்தது.

(iii) 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 174,341 பற்றாக்குறை, 2008 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட ரூபா 3,301,661 தொகையான சீராக்கங்களின் பின்னர் அதற்கு எதிர்மாறாக ரூபா 3,127,320 தொகை மிகையாக மாறியிருந்தது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டங்களின் கீழ் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட பிரேரணை நிகழ்ச்சித் திட்டம்

(I) ஒருங்கிணைக்கப்பட்ட விவசாய மாதிரி நிகழ்ச்சித் திட்டம்

2005 அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட பிரேரணைகளின் பிரகாரம் 100 செயற்திட்டங்கள் ரூபா 500 மில்லியன் நிதிஏற்பாட்டு அடிப்படையில் 2008 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன், நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கிடப்பட்ட கருத்திட்டத்தின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையால் நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 22 செயற்திட்டங்கள் மட்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதிலும் இலக்கிடப்பட்ட முன்னேற்றத்தினை 04 செயற்திட்டங்களே அடையப் பெற்றிருந்தன. அவ்வாறே அரச மற்றும் முயற்சியாளர்களால் ரூபா 500 மில்லியன் வீதம் முதலீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையே ரூபா 69 மில்லியன் மற்றும் ரூபா 151 மில்லியன் மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(II) ஏற்றுமதி விவசாய வலய நிகழ்ச்சித்திட்டம்

(i) ஹம்பாந்தோட்டை - வீரவெல மரக்கரி மற்றும் பழப் பயிர்ச்செய்கை செயற்திட்டம்

- ரூபா 8 மில்லியன் கிரயப்பெறுமதி நிதிஏற்பாட்டு அடிப்படையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முதலாவது கட்டத்தின் கீழ் 15 ஏக்கர் பயிர்ச்செய்கை உருவாக்கும் நடவடிக்கை மற்றும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கல் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு

இலக்கிடப்பட்டிருந்த செயற்திட்டத்தின் பயிர்ச்செய்கை 06 ஏக்கர்களில் மட்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

- நீர்த்தேக்கம், மின்சார வேலி நிர்மாண நடவடிக்கைகள் பண்ணைகளுக்கான கட்டிடங்கள், வீதி முறைமை நிர்மாணம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- இதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாமையால் மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1.5 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அம்பாறை மாவட்டத்தின் அன்னாசிச் செய்கை செயற்திட்டம்

- மீளாய்வாண்டின் யூன் 30 ஆம் திகதி வரையில் 200 ஏக்கரில் பயிர்செய்கை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 44 ஏக்கரிலேயே பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அன்னாசி விதைகள் சமர்ப்பிக்கப்படாமையே அதற்கான காரணமாக இருந்தது.

- மீளாய்வாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் 1,200,000 அன்னாசி விதைகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை 174,401 விதைகள் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

- செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16.2 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் பலவீனமான செயலாற்றல் காரணமாக ரூபா 02 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அது மொத்த நிதிஏற்பாட்டின் 12% ஆக இருந்தது.

(iii) குருணாகல் மாவட்டத்தின் பிங்கிரிய அன்தூரியம் பூ மற்றும் வெட்டப்பட்ட அழகிய தாவர தயாரிப்பு பயிர்ச்செய்கை செயற்திட்டம்

- இலக்கின் பிரகாரம் 02 ஆண்டுகளில் நடவடிக்கைகளை செயற்படுத்தி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் செயற்பாடுகளின் கீழ் கண்டகுவத்த விவசாய மாதிரி பயிர் வலயத்தின் பயிரிடல் மாதிரியை தாபித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், விவசாய வலயத்திற்காக திட்டமிடப்பட்ட உற்பத்திகளைச் சேகரித்தல், பொதியிடல், ஏற்றுமதிக்கு தயார்படுத்தல், பயிற்சியளித்தல் போன்ற நிலையங்களுக்கான கட்டிட நிர்மாணத்திற்காக ஆரம்ப நடவடிக்கைகள் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் அன்தூரியம் பூ செய்கையாளர்களுக்கு 17,000 கன்றுகளும் 50,000 சீமெந்து சாடிகளையும் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதும், அத்தினத்தில் 4300 கன்றுகள் அளவிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், சீமேந்து சாடிகள் வழங்கப்பட்டிருக்க வில்லை.

- அதனால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் உடுபத்தாவ பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 50 வலை வீடுகள் சார்ந்த அன்தூரியம் பூ செய்கை தாபிக்கப்படாதிருந்ததுடன், பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 50 வலைவீடுகள் சார்ந்த பயிர் செய்யப்பட வேண்டிய இலக்கின் பிரகாரம் ஒரு வலைவீட்டுக்கு 800 பூ கன்றுகளாக இருந்த போதிலும் 86 பூக் கன்றுகள் மட்டுமே நடப்பட்டிருந்தன.

- மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 19.8 மில்லியன் நிதிஏற்பாட்டில் 9.6 மில்லியனே பயன்படுத்தப்பட்டிருந்தது. அது நிதிஏற்பாட்டின் 48% ஆக இருந்தது.

(ஆ) சபையின் ஏற்றுமதி மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

(I) ஏற்றுமதிச் சந்தைகளின் மேம்படுத்தல்

❖ மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 40.9 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐரோப்பா, அமேரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆசிய மற்றும் பொது

நலவாய நாடுகளுக்காக ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தும் 31 செயற்பாடுகள் தொடர்பாக ரூபா 24.1 மில்லியன் தொகையான 20 செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டு மற்றும் அமுல்படுத்துதல் வைக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 11 ஏற்றுமதி சந்தை செயற்பாடுகளின் ஆரம்ப நடவடிக்கைகளில் சில மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 16.8 மில்லியன் நிதிஏற்பாட்டில் 3.6 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

- திரட்டிய பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் முறையே 56% மற்றும் 66% ஆக இருந்தன.
- மேலும் ஏற்றுமதிச் சந்தைகளை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு வியாபாரக் கண்காட்சிகளிலும் சந்தைகளிலும் பங்குபற்றிய அநேகமான ஏற்றுமதியாளர் களுக்கு கட்டளை கிடைக்காமல் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக போதியளவில் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(II) ஏற்றுமதி உற்பத்தி வழங்கல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

- மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் விவசாய மற்றும் மீன்பிடி, கைத்தொழில், ஏற்றுமதி சேவைகள், ஏற்றுமதி பொதியிடல் போன்ற ஏற்றுமதி உற்பத்தி வழங்கல் பிரிவின் கீழ் 72 ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 99.59 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 37.30 மில்லியன் தொகைக்குரிய 23 நிகழ்ச்சித்திட்டங்களில் ரூபா 4.70 மில்லினான 05 நிகழ்ச்சித்திட்டங்கள் பிற்போடப்பட்டிருந்ததுடன், ரூபா 1.83 மில்லியன் தொகைக்குரிய 05 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் இடைநிறுத்தப்பட்டிருந்தன.
- 13 எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது போதியளவில் நிறைவேற்றப் படாதிருந்ததுடன், அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா

30.80 மில்லியன் தொகையான நிதிஏற்பாட்டில் ரூபா 0.86 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

- ❖ இதன் பிரகாரம் திரட்டிய பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் முறையே 68% மற்றும் 63% ஆக இருந்தது.

(III) பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- ❖ மேல், தென், மத்திய, வடமேல், வடக்கு கிழக்கு, ஊவா போன்ற பிராந்திய அலுவலகங்களின் மூலம் ரூபா 41.89 மில்லியன் நிதிஏற்பாட்டு அடிப்படையில் செயற்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த 63 பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ரூபா 25.95 மில்லியன் நிதிஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட 11 நிகழ்ச்சித்திட்டங்களில் போதியளவு நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்தமையால் ரூபா 0.07 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- ❖ பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் திரட்டிய பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் முறையே 83% மற்றும் 0.28% ஆக இருந்தது.

(இ) சபையின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த மொத்த தேசிய உற்பத்திக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பங்களிப்பு எவ்வளவு என்பது தொடர்பாக உறுதிப்படுத்த முடியவில்லை.

3.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் வடமேல் மாகாண அலுவலகம் செயற்படுத்தப்படும் கட்டிடத்தின் உடன்படிக்கை காலம் 2009 மே 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இணங்கப்பட்ட ரூபா 100,000 தொகையான மாதாந்த வாடகையைச் செலுத்தி அலுவலகத்திற்காக போதியளவு வசதிகள் இல்லாத பழைய கட்டிடமொன்றை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ‘‘தகஸ்திரிய’’, ‘‘ஒன்றிணைந்த விவசாய மாதிரி’’, ‘‘விவசாய வலயம்’’ போன்ற ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்கிடப்பட்ட நோக்கத்தை

நிறைவேற்றிக் கொள்வது தொடர்பான மதிப்பீடு மற்றும் மீளாய்வு என்பவற்றிற்கான தொடர் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நியதிகள் மற்றும் நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் ஏற்றுமதி மேம்படுத்தல் நிறைவேற்றப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளையும் செயற்திறன், விளைதிறன் மதிப்பாய்வு மற்றும் மீளாய்வு என்பவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் அதிலிருந்து விலகியிருந்தது.

(இ) பிங்கிரிய விவசாய ஏற்றுமதி வலய செயத்திட்டத்தின் கீழ் அன்தூரியம் பூ செய்கையாளர்களுக்காக 50,000 சீமேந்து பூச்சாடிகளும் 17,000 அன்தூரியம் பூ கன்றுகளையும் வழங்குவதற்கான கொள்வனவு நடவடிக்கைகளை செயற்படுத்தும் போது முறையற்ற விதம், குறைபாடுகள், நீண்ட தாமதங்கள் மற்றும் முகாமைத்துவ செயற்திறனின்மை என்பவற்றினால் இலக்கிடப்பட்ட 02 ஆண்டுகளில் அச்செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தன.

(ஈ) சபையின் துணைக்கம்பனியான “ டிவெலப்மென்ட் ஹோல்டிங்ஸ்” (தனியார்) கம்பனியின் பங்குகளில் முதலீட்டிற்காக பங்கிலாபத்தை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை செயற்படுத்தல் தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) கம்பனி 1999 முதல் 2006 காலப்பகுதியில் செயற்பாட்டு நடவடிக்கைளில் பங்கிலாபத்தை செலுத்துவதற்கு போதியளவு இலாபத்தை உழைத்திருந்த போதும், சபையின் முதலீட்டிற்காக அக்காலப்பகுதியில் பங்கிலாபம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், கம்பனியின் இலாபத்தை நிறுத்தி வைத்திருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) கம்பனி 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 8,054,438 தொகை, 12,081,657 தொகை மற்றும் ரூபா 16,108,876 தொகைகளை பங்கிலாபமாக வழங்கியிருந்த போதும், அது மேற்குறித்த ஆண்டுகளின் திசெம்பர் 31 இல் நிறுத்தி வைக்கப்பட்ட திரட்டிய இலாபத்தின் சதவீதமாக 0.96% , 1.34% மற்றும் 1.70% ஆன மிகக் குறைந்த பங்கிலாபமாக இருந்தது.

(iii) சபையின் முதலீட்டிற்காக போதியளவு பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் பாரியளவில் இலாபத்தை நிறுத்தி வைப்பதற்கு கம்பனிக்கு இடமளித்தமை ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்ததுடன், போதியளவில் பங்கிலாபத்தைப் பெற்று

சபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அந்நிதியை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1998 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு வரையில் கணக்கீடு செய்யப்படாத ரூபா 1,154,000 பெறுமதியான நிலையான வைப்பிற்காக வைப்புத் தொகை மற்றும் ரூபா 2,535,734 தொகையான வட்டி என்பன மீளாய்வாண்டின் போது மீளப் பெற்றுக்கொள்ளப்பட்ருக்கவில்லை. இது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வைப்பினை கணக்கீடு செய்வதற்கும் வைப்பிற்குரிய எழுத்துமூல சான்றுகள் உள்ளடக்கப்பட்ட கோவைகள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றைப் பராமரிக்க போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலையான வைப்பு வட்டி அடிப்படையில் ரூபா 281,748 தொகையான நிறுத்தி வைத்தல் வரி (WHT) வங்கியால் அறவிடப்பட்டிருந்ததுடன், 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் iv ஆம் பகுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சபை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட சட்டரீதியான நிறுவனமொன்றாக இருந்தமையால் வட்டி வருமான அடிப்படையில் வரி அறவிடுவதைத் தவிர்ப்பதற்கு அல்லது அறவிடப்பட்ட வரியை மீளப் பெற்றுக்கொள்ள போதியளவில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) பல்வேறு ஏற்றுமதி மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்த ரூபா 156,848,566 தொகையான முதலீட்டைப் பராமரித்தல் தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) கம்பனி உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய இலக்கிடப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுதற்கு அல்லது வெற்றியளிக்காமை என்ற அடிப்படையில் செயற்பாடுகளை இடைநிறுத்தி செயலற்றுக் காணப்படும் கம்பனிகளில் கொடுக்கல்வாங்கல்களை தீர்த்து வைத்து, அதனைக் கலைத்து முதலீடு செய்யப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ii) தொடர்ந்தும் செயலாற்றும் நிலைமையில் காணப்படும் கம்பனி தொடர்பாக ஆராய்ந்து செயற்பாடு தொடர்பான அறிக்கை பேணப்படாதிருந்ததுடன், செயற்படும் கம்பனிகளில் முதலீட்டிற்கான

பங்கிலாபத்தை பெற்றுக்கொள்வதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று காணப்படவில்லை.

(iii) கம்பனி பங்குகளில் செய்த முதலீட்டின் பெறுமதி குறைவடைந்திருப்பதாகவும் குறைவடைந்த பெறுமதி முறையான செயற்பாட்டு அடிப்படையில் உறுதிப்படுத்தாமல் பெறுமதி முழுமையாக குறைவடைந்தமைக்காக முறையற்ற விதத்தில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) ஊவா பரணகம பச்சை வீட்டு செயற்திட்டத்தின் கீழ் காய்கறி பயிர்ச்செய்கைக்காக 600 பச்சை வீடுகளைப் நிர்மாணிப்பதற்கான செலவினங்களை மேற்கொள்வதற்வதற்காக கிராமிய பொருளாதாரத்தினை புனர்வாழ்வளித்தல் நிதியத்திலிருந்து ரூபா 30 மில்லியன் 2003 ஆண்டின் போது சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், 100 பச்சை வீடுகளே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மிகுதியாகவுள்ள 500 பச்சை வீடுகளின் நிர்மாண நடவடிக்கைகள் 2011 ஏப்ரல் 30 வரையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக சபையால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 100 பச்சை வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஊவா பரணகம விவசாயிகளுக்கு செலுத்திய ரூபா 5 மில்லியன் தொகை மற்றும் அக்கடனிற்காக உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் 1% சேவைக் கட்டணம் ஒன்றினைச் செலுத்தும் பொறுப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 7.4.1 (வீ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் 30 கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பாக, நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது குழுவின் கவனம் செலுத்தப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.3 சர்ச்கைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென்னை இலங்கை வர்த்தக நிலையத்தின் வாடகைக்கு வழங்கப்பட்ட வியாபார நிலையங்களிலிருந்து பெற்றுக்கொண்ட பாதுகாப்பு வைப்பு மீதி கணக்கின் பிரகாரம் ரூபா 625,996 ஆகவும், நிலுவையாக இருந்த கடை வாடகைக்காக எதிரீடுசெய்தல் ரூபா 680,247 தொகையும் மீளச்செலுத்தல்கள் ரூபா 305,749 தொகையுமாக மொத்தம் ரூபா 985,996 கூட்டுமொத்த தொகை

மீளாய்வாண்டில் பாதுகாப்பு வைப்புக்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பாதுகாப்பு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 360,000 ஐ மிகைத்து வைப்புக்கள் விடுவிக்கப்பட்டமை சர்ச்சைக்குரியதாக இருந்ததுடன், அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை, கடன்பட்டோரின் கீழ் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) இதனால் ரூபா 360,000 தொகையான போலிச் சொத்துக்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வெளிநாட்டு வியாபார கண்காட்சிகளில் பங்குபற்றும் ஏற்றுமதி கம்பனிகளுக்காக நிதி உதவிகள் வழங்குவதில் அங்கீகரிக்கப்பட்ட முறைகளிலிருந்து விலகியும் அங்கீகரிக்கப்பட்ட நிதிஉதவிகளுக்கு மேலதிகமாக வெளிநாட்டு வியாபார கண்காட்சியொன்றில் பங்குபற்றிய ஏற்றுமதி கம்பனி ஒன்றுக்கு ரூபா 114,400 கடன் தொகையும் 2009 சனவரி 06 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன், 2011 ஏப்ரல் 30 வரையில் அக்கடன் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.2.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெவ்வேறு செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த 03 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய செயற்பாடுகள் முடிவடைந்ததன் பின்னர் கொடுக்கல்வாங்கல்கள் தீர்வு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 1,875,331 தொகையான மீதியை சபையின் செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தாமல் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபையினால் செயற்படுத்தப்படும் ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத ரூபா 70,454,532 தொகையான நிதி வங்கி நடைமுறைக் கணக்கில் 2010 திசெம்பர் 31 இல் மீதியாக இருந்தது. முன்னைய ஆண்டிலும் பயன்படுத்தாத ரூபா 1,965,340 தொகையான நிதி வங்கி நடைமுறைக் கணக்கில் மீதியாக இருந்தது.

3.2.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 8.3.9 பந்திக்கு முரணாக ஏனைய அரச நிறுவனமொன்றுக்கு 2009 நவம்பர் 19 ஆம் திகதி முதல் 2010 யூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 06 வாடகை வாகனங்களை வழங்கி வாகனக் கட்டணமாக ரூபா 1,689,764 தொகையும் வாகன சாரதிகளுக்காக மேலதிக நேர வேலை மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக ரூபா 92,450 தொகையுமாக ரூபா 1,782,214 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் 03 வாகனங்களையும் பதவியணியின் 03 உத்தியோகத்தர்களையும் அமைச்சின் சேவைக்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன், வாகனப் பராமரிப்புச் செலவினம் பதவியணி மேலதிக நேர வேலை மற்றும் இணைந்த படிகள் என்பவற்றிற்காக முறையே ரூபா 2,166,275 தொகை மற்றும் ரூபா 987,176 தொகையுமாக மொத்தம் ரூபா 3,153,451 தொகை மீளாய்வாண்டின் போது சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

3.2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தாபிக்க முடியாமல் போன திருகோணமலை பிராந்திய அலுவலகத்திற்காக 2006 ஆம் ஆண்டில் ரூபா 80,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த காற்றுச் சீராக்கி இயந்திரம் குருநாகல் பிராந்தியக் காரியாலயத்தில் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாமல் காணப்பட்டமையால் செயற்படாத நிலைக்குட்பட்டு மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தாபிக்கப்பட்ட படஅத கைத்தொழில் செயற்திட்டத்தின் தோற்பொருள் கைத்தொழில் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட “SLAT (PVT) LTD” இன் சாதாரண பங்குகளில் சபையினால் 1999, 2000 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் கைவிடப்பட்டிருந்தமையால் கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பத்திலேயே செயற்பாடற்றிருந்தது.

அம்முதலீட்டிற்கான உரிய பங்குச் சான்றிதழும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) இந்தியாவின் சென்னை இலங்கை வர்த்தக நிலையத்தின் 03 கடைகளிலிருந்து 02 ஆண்டுகள் முதல் 06 வரையான காலத்திற்குரிய அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 2,026,887 தொகையும் மின்சாரக் கட்டணமாக ரூபா 312,289 தொகையுமாக மொத்தம் ரூபா 2,339,176 தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமையால் அத்தொகையை அறவிட முடியாதிருந்தது.

(ஈ) சபையின் 08 மோட்டார் வாகனங்களுக்கு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் இடம்பெற்ற 13 விபத்துக்களுக்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்த காப்புறுதி இழப்பீட்டுத் தொகையில் அறவிடப்படாதிருந்த ரூபா 373,188 தொகை மீளாய்வாண்டின் போது வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்புச் செலவினத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது.

3.2.7 கொள்வனவு ஒப்பந்தப் நிர்வாகம்

(அ) அம்பாறை மாவட்டத்தின் அன்னாசி பயிர் செயற்திட்டத்திற்காக மொரயியன் கொள்வனவு - ரூபா 9,000,000

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.12, 5.3.11, 6.2, 6.3.1 மற்றும் 6.3.6 ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாமல் முறையற்ற விதத்தில் கிடைக்கப் பெற்றிருந்த ஒரே கேள்விக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்தப் பெறுமதியில் 50% ஆன ரூபா 4,500,000 தொகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக செயலாற்றல் பிணையொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் ஒரு தடவைக்கு ஆகக் குறைந்தது 100,000 இற்கு குறையாத அளவொன்றில் 04 சந்தர்ப்பங்களின் போது மீளாய்வாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் 1,200,000 அளவிலான அன்னாசி மொரயியன்

வழங்கல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ஒரு தடவைக்கு அதனை விடக் குறைந்த அளவில் 10 சந்தர்ப்பங்களின் போது 174,401 மொரயியன்கள் சிறியஅளவிலேயே வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தும் வழங்கப்பட்டிருந்த மொரயியன்களின் பிரகாரம் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,191,993 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) உடன்படிக்கையினை மீறுதல் தொடர்பாக உடன்படிக்கையின் 10 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்தக்காரரிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) அன்னாசி மொரயியன் வழங்காமையால் பயிர்ச்செய்கை உருவாக்கம் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிங்கிரிய வெட்டப்பட்ட அழகு தாவர கன்று பயிர் செயற்திட்டத்திற்காக 100 வலை வீடுகள் நிர்மாணிப்பு ரூபா 12,164,700

----ஒப்பந்தம் ரூபா 12,164,700 இற்கு வழங்கப்பட்டு உடன்படிக்கையை மேற்கொண்டதன் பின்னர் நிர்மாணங்களுக்கான விதந்துரைப்புக்களை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் உடன்படிக்கையின் பிரகாரம் 2010 பெப்ரவரி 28 ஆம் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய ஒப்பந்தம் 2011 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன்பிரகாரம் கொள்வனவு நடைமுறைகளை செயற்படுத்தும் போது நீண்ட காலதாமதம் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.2.8 பதவியணி கட்டமைப்பு

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் 365 பேராகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியினர் 252 பேராக இருந்தமையினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினரின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 113 ஆக அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 31% சதவீதமாக இருந்தது.

3.2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு

2010 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 390 மில்லியன் ஆக இருந்தது. ஆயினும் ஆண்டின் இறுதியில் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான உள்ளவாறான செலவினம் ரூபா 221 மில்லியன் ஆக இருந்ததனால் உள்ளவாறான செலவினம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடுகள் 57% ஆக இருந்தது. அதன் பிரகாரம் பாதீடு சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்களை கைதவிர்த்தல்

(ஆ) கம்பனிகளின் பங்கு விடயங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடும் அவற்றிற்கான பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்ளலும்

(இ) ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களை மீள அறவிடல்

(ஈ) நிலுவை வருமான அறவீடு

(உ) நிதியப் பயன்பாடு

(ஊ) துணைப் பதிவேடுகளைப் பேணுதல்

(எ) அசாதாரணமான கணக்கு மீதிகளின் தீர்ப்பனவு

(ஏ) சொத்து மெய்மையாய்வு

(ஐ) ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்திட்டங்களை அமுல்படுத்தல், நோக்கத்தை நிறைவேற்றுதல் தொடர்பான மீளாய்வும் பின்தொடர் நடவடிக்கைளும்

(ஒ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுதல்

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

m/z